சீக்ரட் நாவல் இதழ் 22

ராஜேஷ்குமார்

# இது காதல் காலம்

## 1



விடியற்காலை மூன்று மணி.

நகர எல்லையைத் தாண்டியிருந்த அந்த வாசவி கல்யாண மண்டபம் ஜுரவேகத்தில் இருந்தது. நான்கு மணியிலிருந்து ஐந்து மணி வரைக்கும் முகூர்த்தம். மண்டப வாசலில் நின்று - வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார்கள் குருமூர்த்தியும், பங்கஜமும்.

''வாங்க சந்தானம்... வாங்க...''

''என்ன குரு... கல்யாணத்தை... ஊர்க்கு வெளியே தள்ளியிருக்கிற இந்த மண்டபத்துல வெச்சுட்டே...?''

''என்ன பண்றது...? வேற மண்டபம் கிடைக்கலையே...?''

''சரி மண்டபம்தான்... ஊர்க்கு வெளியே கிடைச்சது. இந்த முகூர்த்த நேரத்தையாவது இவ்வளவு விடிகாலையில் இல்லாமல் கொஞ்சம் விடிஞ்சு வெச்சிருக்கலாமே...''

''எம் பொண்ணு கோபிகாவோட ராசிக்கும் நட்சத்திரத்துக்கும் நாலு மணியிலிருந்து அஞ்சு மணிக்குள்ளேதான் முகூர்த்தம் வெக்கணும்ன்னு ஜோசியர் சொல்லிட்டாரு. நான் என்ன பண்ணட்டும்...?''

''பரவாயில்லை... இவ்வளவு காலையிலும் மண்டபத்துக்குள்ளே கும்பல் இருக்கு....''

''நமக்கு வேண்டியவங்க வந்துதானே ஆகணும்... சந்தானம்'' குருமூர்த்தி அவரை உள்ளே அனுப்பி வைத்த விநாடி -

மண்டபத்தின் மேல் மாடியிலிருந்து - அந்தப் பெண் இறங்கி வந்து பங்கஜத்தின் பக்கமாய் நின்றாள்.

''அம்மா...!''

பங்கஜம் ஏறிட்டாள். ''என்ன சித்ரா...?''

''கோபிகாவுக்கு தலைவலியாம்... ஏதாவது ஒரு மாத்திரை வாங்கிட்டு வரச்சொல்லிச்சு....''

''சூட்கேஸ் உறைக்குள்ளே எல்லா மாத்திரையும் இருக்குமே?''

''தேடிப் பார்த்தோம். கிடைக்கலை....''

''பங்கஜம்! நீ ஒரு நடை மாடிக்குப் போய் - கோபிகாவுக்கு மாத்திரை எடுத்து குடுத்துட்டு வந்துடு... கொஞ்ச நேரத்துல மணவறையில்

உட்காரப் போறவளாச்சே...? தலைவலியோடு எப்படி உட்காருவா...?''

''அப்பாவை விட்டு பிரியப் போகிற துக்கத்துல... ராத்திரி பூராவும் அழுதிருப்பா... உங்க அருமந்தப் பொண்ணு... தலையில் நீர் கோர்த்துக்கிட்டு... தலைவலி வந்திருக்கும், பாசம்... பொல்லாத பாசம்....''

''சரி... சரி... வாயாடாமே... போய் கோபிகாவுக்கு மாத்திரை எடுத்துக் குடுத்திட்டு வந்துடு... குழந்தை தலைவலியாலே துடிச்சிட்டிருப்பா...''

''குழந்தை....? மடியில போட்டு பால் தடுங்களேன்... யார் வேண்டாம்ன்னு சொன்னாங்க...''

பங்கஜம் தோள்பட்டையில் மோவாயை இடித்துக் கொண்டவள் வேகவேகமாய் மாடியை நோக்கிப் போனாள். 'மணமகள்' - என்று எழுதப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தவள் - கோபிகா சர்வ அலங்காரத்தோடும் - நெற்றியில் கட்டிக் கொண்ட கர்ச்சீப்போடும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் பொங்கினாள்.

''என்ன தலைவலியா...?''

''ஆமாம்மா...''

''ராத்திரி பூராவும் உங்கப்பாவை நினைச்சு அழுதிட்டிருந்தியா...?''

''இ...இல்லேம்மா...''

''எனக்கு தெரியும்டி...! உன்னெப் பத்தி எனக்கு தெரியாதா என்ன? பொண்ணாப் பொறந்தவ என்னிக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு... ஒருத்தன் கைய பிடிச்சுகிட்டு அவன் பின்னாடியே போக வேண்டியதுதான்... உங்கப்பாவுக்காக ரொம்பவும் உருகி வழியாதே...! புருஷன் வீட்டுக்கு போய் ரெண்டு நாள் இருந்தியானா... அப்புறம் இந்த அப்பா உனக்கு துச்சமாயிடுவார்.''



கோபிகா புன்னகைத்தாள்.

''மொதல்ல மாத்திரை எடுத்து குடும்மா. தலைவலி உயிர்போகுது... இந்த தலைவலி இப்படியே இருந்தா... என்னால மணவறைக்கு வரமுடியாது.

''சூட்கேஸ்ல பார்த்தியா...?''

''பார்த்தேன்...?''

''பிளாஸ்டிக் உறைக்குள்ளே பார்த்தியா?''

''பார்த்தேன்...?''

''நீ ஒழுங்கா பார்த்திருக்க மாட்டே?'' - கடுகடுத்தவள் சுவர் ஆணியில் மாட்டப் பட்டிருந்த மலர்மாலைகளுக்கு கீழே இருந்த சூட்கேஸைத் திறந்து குடைந்தாள். இரண்டு நிமிஷ நேரம் தேடிவிட்டு.... ''வெச்ச மாத்திரை எங்கே போச்சு...?'' - என்று சொல்லி தாடையில் கை வைத்தாள்.

''அம்மா! எனக்கு தலைவலி உயிர்போகுது. போதாக்குறைக்கு இந்த வாத்திய சத்தம் வேற 'டொம் டொம்'ன்னு... நடு மண்டையில இடி இறங்கிற மாதிரி இறங்குது...''

''சரி... இரு. யாரையாவது வெளியே அனுப்பி மாத்திரை வாங்கிட்டு வரச்சொல்கிறேன்...''

''அம்மா! நீ மாத்திரை வாங்கிட்டு வர்ற வரைக்கும் என்னால் இந்த ரூம்ல இருக்க முடியாது. தவில் சத்தம் காதுக்குள்ளேயே... இருக்கு....''

''உன்னோட தலைவலிக்காக தவில் வாசிக்க வேண்டாம்ன்னு சொல்றியா...?''

''நான் அப்படி சொல்லலை...''

''பின்னே...?''

''மண்டபத்துக்குப் பின்னாடி ஒரு ரூம் காலியா இருக்கே. அந்த ரூமுக்குப்போய் - கொஞ்ச நேரம் கண்ணை சாய்க்கிறேன்...''

''என்டி... நாலு மணிக்கு நீ மணையில உட்காரணும்... இப்ப போய் தூங்கறேன்னு சொல்றியே...? உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்...''

''அய்யோ அம்மா! நான் தூங்கப் போறதாவா சொன்னேன்... இந்த சத்தத்திலிருந்து தப்பிக்கிறதுக்காக - கொஞ்ச நேரம் அந்த ரூம்ல ரெஸ்ட் எடுக்கப் போறதா சொன்னேன். எனக்கு மாத்திரை கூட வேண்டாம். சூடா ஒரு டம்ளர் காப்பி சாப்பிட்டு தலையை அசக்காமே கொஞ்ச நேரம் படுத்திட்டிருந்தா போதும்...''

''அப்படின்னா மாத்திரை வேண்டாமா?''

''வேண்டாம்...''

''சரி! சித்ரா... இவளைக் கூட்டிக்கிட்டு அந்த ரூமுக்கு போ. சமையல் ஆள்கிட்டே சொல்லி - சூடா காப்பி வாங்கி குடு. கொஞ்ச நேரம் அவ தலையைச் சாய்க்கட்டும். நான் மூணே முக்கால் மணிக்கு வந்து எழுப்பறேன்.''

பங்கஜம் சொல்லிவிட்டு நகர -

கோபிகாவும் சித்ராவும் ஒருத்தரையொருத்தர் பார்த்து - புன்னகைத்துக் கொண்டார்கள்.

''எப்படி நம்ம திட்டம்?'' - காதருகே கிசுகிசுத்தாள் சித்ரா.

''ஃபெண்டாஸ்டிக்...''

''பின்னாடி இருக்கிற ரூமுக்கு போயிடலாமா?''

''ம்... கிளம்பு....''

''மொதல்ல உன் நெற்றிக்கு கட்டியிருக்கிற கர்ச்சீப்பை அவுத்து எறி. பட்டுப் புடவையைக் கட்டிகிட்டு, ஜடை அலங்காரம் பண்ணிக்கிட்டு - நெத்தியில் ரவுடிக்கட்டு மாதிரி கர்ச்சீப்பையும் கட்டிகிட்டு... கண் கொண்டு பார்க்க சகிக்கலை...''



''சரி... வா...'' கர்ச்சீப்பை அவிழ்த்து எறிந்துவிட்டு அறையினின்றும் இருவரும் வெளிப்பட்டார்கள்.

மண்டபவம் முழுக்க இரைச்சல்.

''கும்பலைப் பார்த்தியா கோபிகா...?''

''ம்... போகப்போக... இன்னும்... ஏறும்... போலிருக்கு.''

''இந்தக் கல்யாணம் நடக்கும்ங்கிற நம்பிக்கையில் எல்லோரும் வந்திட்டிருக்காங்க. பாவம்...''

வராந்தாவின் இடது பக்கம் தெரிந்த ஹாலில் - காலை டிபனுக்குரிய முஸ்தீபுகள் நடந்திருக்க - சமையல் ஆட்கள் - கட்டியிருந்த வேஷ்டியையே கழுத்துவரை போர்த்திக்கொண்டு - விதவிதமான குறட்டைகளில் இருந்தார்கள்.

கோபிகாவும் சித்ராவும் - கல்யாண மண்டபத்தின் பின்பக்க அறைக்கு வந்து - உள்ளே புகுந்தார்கள்.

சித்ரா பெருமூச்சு விட்டாள்.

''திட்டத்தோட முதல் படிக்கு வந்துட்டோம்...! வெங்கடேஷ் சொன்னபடி மூணேகால் மணிக்கு வந்துடுவாரா...?''

''கண்டிப்பா வந்துடுவார்...''

''நான் போய்... மண்டபத்தோட... பின்பக்கக் கதவைத் திறந்து பார்த்துட்டு வரட்டுமா...?''

''ம்...''

சித்ரா கிளம்பி - மண்டபத்தின் பின்பக்கக் கதவை நோக்கிப் போக - கோபிகா தன் ஜாக்கெட்டின் பிளவில் எட்டாய் மடித்து வைத்திருந்த கடிதத்தை எடுத்து - மறுபடியும் பிரித்து படித்தாள்.

கோபிகா!

எதற்கும் கவலைப்படாதே! நான் சகல ஏற்பாடுகளோடு விடியற்காலை 3-15-க்கெல்லாம் மண்டபத்தின் பின்பக்க கதவருகே காரோடு காத்திருப்பேன். நீ ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி - பின்பக்கமாய் வந்துவிட்டால் - போதும். சென்னை புறப்பட்டுப்போக விமான டிக்கெட்களும் ரெடி. உன் தோழி சித்ரா நீ மண்டபத்தை விட்டு வெளியே வர உனக்கு உதவுவாள் என நம்புகிறேன்.

இப்படிக்கு
வெங்கடேஷ்.

கடிதத்தை படித்து முடிப்பதற்குள் -

சித்ரா வந்தாள்.

''என்னடி...?'

''யாரையும் காணோம். ரோடு வெறிச்சென்று இருக்கு...''

''இப்ப மணி எவ்வளவு...?''

''மூணு பத்து...''

''சரியா 3-15-க்கு வந்துடறேன்னு சொல்லியிருக்கார்... சொன்னா சொன்னபடி 'டாண்'னு வந்துடுவார் வெங்கடேஷ்....''

''கொஞ்சம் முன்னாடியே வந்தா என்ன வாம்...?''

''திட்டம்னா என்னடி அர்த்தம்....? குறிப்பிட்ட நேரத்துக்குத்தான் வரணும்...''

''எனக்கு நெஞ்சக்கூடு திக்திக்ன்னு இருக்கு...! நீ பாட்டுக்கு வெங்கடேஷ் வந்ததும் கார்ல ஏறிக்கிட்டு போயிடுவே... நானில்ல உங்கப்பா உங்கம்மாகிட்டே மாட்டிக்கணும்...''

''என்ன பொய்யைச் சொல்லி... எப்படி சமாளிக்கணும்ன்னு நான்தான் ஏற்கெனவே சொல்லிக் குடுத்திருக்கேனே... அதை அப்படியே ஒப்புவிச்சு... ஒரு பாட்டம் அழ வேண்டியது தானே...?''



''டொக்... டொக்...''

''யாரோ கதவைத் தட்றாங்க... கோபிகா...''

''அதை என்கிட்டே சொல்லணுமா.... போய் கதவைத் தொறந்து பாரடி...''

சித்ரா போய் கதவைத் திறந்தாள்.

வெளியே -

கோபிகாவின் அப்பா குருமூர்த்தி நின்றிருந்தார். கதவு திறந்ததும் லேசான பதட்டத்தோடு உள்ளே நுழைந்தார்.

''என்னம்மா... கோபிகா... தலைவலி இப்போ எப்படியிருக்கு...?''

''ஒரு மணி நேரம் ரெஸ்ட் எடுத்தா சரியா போயிடும்பா...''

''காப்பி சாப்பிட்டியா...?''

''வேண்டாம்பா... வெறும் வயித்துல காப்பி சாப்பிட்டா எனக்கு புரட்டிவிடும்...''

''வெளியே போய் ஏதாவது மாத்திரை வாங்கிட்டு வரட்டுமா?''

''இந்நேரத்துக்கு... இந்த ஏரியாவில... எங்கேன்னு போய் மாத்திரையை வாங்கிட்டு வருவீங்கப்பா...?''

குருமூர்த்தி பட்டுச்சட்டையின் மேல் கட்டியிருந்த - வாட்ச்சை உயர்த்திப் பார்த்தார்.

''மணி மூணே கால்...''

''ஒரு அரைமணி நேரம்... நான் ரெஸ்ட் எடுத்தா போதும்பா...''

''சரிம்மா... நீ ரெஸ்ட் எடு... மூணே முக்கால் மணிக்கு உங்கம்மாவை அனுப்பறேன்... நாலு மணிக்கெல்லாம் நீ மணவறைக்கு வந்துடணும்.''

தலையாட்டினாள் கோபிகா.

## 2



"டேய்... பிரதீப்! மணி மூணு பத்து..." வெங்கடேஷ் பரபரத்தான்.

"போயிடலாண்டா..." காரை ஓட்டிக் கொண்டிருந்த பிரதீப் புன்னகைத்தான். உதட்டில் சிகரெட் குரங்கு குட்டி மாதிரி தொற்றிக் கொண்டிருந்தது.

"இப்பத்தான் சிங்காநல்லூரைத் தொட்டி ருக்கோம். ஒண்டிப்புதூரைத் தாண்டி - செல்வராஜபுரம் கல்யாண மண்டபத்தை தொடறதுக்குள்ளே மணி மூணரை ஆயிடும் போலிருக்கே...! காரை இன்னும் கொஞ்சம் வேகமாத்தான் ஓட்டேண்டா... பாவி..."

"அறுபதுக்கு மேலே போனா வண்டி தறும்...! என்னால அப்புறம் பாலன்ஸ் பண்ண முடியாது... எதிர்ல லாரியோ பஸ்ஸோ வந்தா சொருகிடுவேன்..."

"படுபாவி! உன் வாய்ல நல்ல வார்த்தையே வராதா...? அங்கே கோபிகா இந்நேரம்... நெருப்புல நிக்கற மாதிரி நின்னுட்டிருப்பா..."

"ஏண்டா... ரெண்டு நாளைக்கு முன்னாடியே... கோபிகாவை கூட்டிகிட்டு கிளம்பியிருக்கலாமில்லையா...?"

"அவளைத்தான் வெளியே விடவே இல்லையே...! அய்யோ! மணி மூணேகால். திட்டப்படி இந்நேரம் கார் கல்யாண மண்டபத்துக்கு பின்னாடி நின்னுட்டிருக்கணும். உன்னோட ஓட்டைக்கார் இன்னும் ஒண்டிப் புதூரைக் கூட தாண்டலையே...?"

"ஓட்டைக்கார்ன்னு இன்னொரு வாட்டி சொன்னே...? ரோட்டோரமா நிறுத்திட்டு நான் பாட்டுக்கு டீ குடிக்க போயிடுவேன்..."



"அயோக்கிய படவா...! அப்படியெல்லாம் பண்ணிடாதே..."

"ஓட்டைக்கார்ன்னு சொல்லுவியா...?"

"மாட்டேன்! இந்த இம்பாலாவை இனிமே அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன்... கொஞ்சம் வேகமா ஓட்றா..."

பிரதீப் ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

ட்ராபிக் அறவே இல்லாத அந்த விடியற்காலை ரோட்டில் - கார் உடம்பை உதறிக் கொண்டு பறந்தது.

அரை கிலோ மீட்டர் தூரம் சென்றிருக்கும்.

திடீரென்று - போச்சுடா!" என்றான் பிரதீப்... தலையில் இடது கையை வைத்து.

"என்னடா...?"

"எதிர்ல பாரு...! ரெயில்வே கேட் போட்டுட்டான்..."

வெங்கடேஷ் திகிலோடு பார்க்க - ரோட்டின் குறுக்கே இரண்டு சிவப்பு விளக்குகள் பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் சில வாகனங்கள் தவத்தில் இருந்தன.



## 3

நேரம் 3.20.

பட்டுப்புடவைக்குள் வியர்த்து ஊற்றிக் கொண்டிருந்தாள் கோபிகா. சித்ரா நிமிஷத் திற்கொரு தரம் மண்டபத்தின் பின்பக்கத் கதவுக்கு போய் - தவிப்பாய் எட்டி பார்த்துவிட்டு 'அச்சச்சோ...! இன்னும் காணோமே!' என்று கைகளை உதறிக் கொண்டு வந்தாள்.

''இப்ப... என்னடி பண்றது...?'' கோபிகா பதட்டமாய் நகம் கடித்து துப்பிக் கொண்டே கேட்டாள்.

''நான் ஒரு யோசனை சொல்லட்டுமா...?''

''சொல்லு...''

''இன்னும் கொஞ்ச நேரம்... வெங்கடேஷுக்காக வெயிட் பண்ணிப்பாரு வரலைன்னா...?''

''வரலைன்னா...?''

''இதே மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கோ...''

கோபிகா முறைத்தாள்.

''ட... விளையாடாதே! போய் இன்னொரு தடவை பின்பக்கக் கதவை திறந்து பார்த்துட்டு வா...''

''இப்பத்தான் போய்ட்டு வந்தேன்...''

''இன்னொரு வாட்டி போய்ட்டு வந்தா... என்ன ஆயிடும்...? போய் பார்த்துட்டு வாடி...''

சித்ரா போய் பார்த்துவிட்டு வந்தாள்.

''என்னடி...?''

''குப்பைத் தொட்டிகிட்டே ஒரு சொறிநாய் மட்டும் படுத்திட்டிருக்கு... வீதி பூராவும் வெறிச்சோ வெறிச்.''

''சை! மனுஷன் ஏன் இவ்வளவு லேட் பண்றார்?''

''ஒருவேளை நல்லா போர்த்துகிட்டு படுத்து தூங்கிட்டாரோ...?''

''சித்ரா! பீ ஸீரியஸ். என் நிலைமை புரியாமே நீ பேசிட்டிருக்காதே...!''

''அய்யய்யோ...!''

''என்னடி...?''



''உன்னோட அம்மா குரல் கேட்குது..! பேசாமே அந்த சேர்ல உட்கார்ந்து கண்ணை மூடிக்கோ... தூங்கற மாதிரி பாவ்லா பண்ணு. நான் பேசி அனுப்பிச்சுடறேன்...''

கோபிகா சேரை நோக்கி போய் - சாய்வாய் உட்கார்ந்து - கண்களை மூடிக் கொண்டாள்.

இருதயம் 'திக்...திக்' என்று வேகமாய் அடித்துக் கொண்டது.



## 4

**லெ**வல் க்ராஸிங் சாத்தப்பட்டிருக்க - ஒரு பஸ்ஸுக்குப் பின்னால் கொண்டு போய் காரை நிறுத்தினான் பிரதீப். வெங்கடேஷ் பொருமினான்.

''கொஞ்சம் வேகமா வந்திருந்தா... இந்த லெவல் க்ராஸிங்கை அவாய்ட் பண்ணியிருக்கலாம்...''

''நான் என்னடா பண்ணட்டும்... காரை மேக்ஸிமம் வேகத்துல விரட்டிகிட்டு வந்தேன்...''

''கேட்மேனை போய் கெஞ்சிப் பார்க்கலாமா...?''

''லெவல் கிராஸிங்கல கேட்டைச் சாத்திட்டா... ஜனாதிபதியே கார்ல வந்தாலும் காத்திட்டிருக்க வேண்டியதுதான்...''

''ப்ராண்க்க்...''

''ஹம்மாடி! ரயிலோட சைரன் சத்தம் கேட்குது. மிஞ்சிப் போனா அஞ்சு நிமிஷம் தான் காத்திட்டிருக்க வேண்டிவரும்... அதோ எஞ்சின் ஹெட்லைட் தெரியுது''

''இப்ப மணி எவ்வளவு?''

''மூணு இருபது...''

''கவலைப்படாதே! மூணரை மணிக்கெல்லாம் கல்யாண மண்டபத்துக்கு பின்னாடி போயிடலாம்.''

''டேய் பிரதீப்! என் வாழ்க்கையே உன்னோட கையில்தான்... இருக்கு... கேட் திறந்ததும் நீ காரை என்ன பண்ணுவியோ... எது பண்ணுவியோ எனக்குத் தெரியாது. அது இறக்கை கட்டிகிட்ட மாதிரி பறக்கணும்...''

நீளமான சைரனோடு - ட்ரெயின் லெவல் கிராசிங்கை கடக்க ஆரம்பித்தது. 'தட்...தடக்... தட்...தடக்...தட்...தடக்...தட்...தடதடக்...''

''என்னடா இவ்வளவு கம்பார்ட்மெண்ட்ஸ் போட்டிருக்கான்?''

''வழக்கமா போடற கம்பார்ட்மெண்ட்ஸ் தான். இன்னிக்கு உனக்கு இவ்வளவு நீளமா தெரியுது?''

''ட்ரெயின் க்ராஸ் பண்றதுக்கே அஞ்சு நிமிஷம் ஆயிடும் போலிருக்கே...?''

''டேய் வெங்கடேஷ்! கொஞ்ச நேரம் அலம்பாமே உட்கார்டா. சுடுதண்ணியில விழுந்த சுண்டெலியாட்டம் ஏன் குதிக்கிறே...? ரெயில் முழுசும் போகாமே.. கேட்மேன் கேட்டைத் திறக்கமாட்டான்....''

''டயத்தை பார்த்தியா... மூணு இருபத்திரெண்டு''

''எட்டு நிமிஷத்துல மண்டபத்துக்கு போயிடலாம்.''

''எனக்கு நம்பிக்கையில்லை... கோபிகாவும் எனக்கு இல்லை. இந்நேரம் அவ மனசு ஒடிஞ்சு போய்...''

ட்ரெயின் இன்னமும் தடக் தடக்கென்று க்ராஸிங்கை கடந்து கொண்டிருந்தது.



# 5

பங்கஜம் அறைக்குள் நுழைந்தாள்.

''என்னடி... உன்னோட தலைவலி இப்போ எப்படியிருக்கு.''

''உஸ்...'' சித்ரா உதட்டுக்கு நடுவே விரலை வைத்தாள். ''இப்பத்தாம்மா... கண்ணை சாய்ச்சு தூங்க ஆரம்பிச்சா... சத்தம் போடாதீங்க...''

''என்ன பொண்ணுடி இவ...! மணவறையில் உட்கார்ற நேரமா பார்த்து... தலைவலின்னு... சொல்லிட்டு தூங்கிட்டிருக்கா...''

''என்னம்மா பண்றது...? தலைவலியும் காய்ச்சலும் சொல்லிட்டா வரும்...?''

''சரி... சரி... பெரிய மனுஷி மாதிரி வியாக்யானம் பேசிட்டு நீயும் தூங்கிடாதே! சரியா மூணே முக்கால் மணிக்கெல்லாம் ரூமுக்கு வந்துடணும். சரியா நாலுமணிக்கு அவ மணையில உட்காரணும்.''

''நான் கூட்டிட்டு வந்துடறேன்மா...''

பங்கஜம் தூங்கிக் கொண்டிருந்த கோபிகாவை ஏற இறங்க ஒரு தடவை பார்த்துவிட்டு பொருமினாள். ''இன்னும் ஒரு மணி நேரத்துல கழுத்துல தாலியை வாங்கிக்கப் போறவ... நெஞ்சில ஒரு பயம்கூட இல்லாமே எப்படி தூங்கறா... பாரு... எல்லாம் அவங்கப்பா குடுக்கிற செல்லம்...''

''கத்தாதீங்கம்மா...'' சித்ரா கிசுகிசுப்பாய் சொன்னாள்.

''நான் கத்தலையடிம்மா... அந்த மகாராணி நிம்மதியா தூங்கட்டும். சரியா மூணே முக்காலுக்கு எழுப்பி கூட்டிகிட்டு வந்துடு...''

பங்கஜம் நகர்ந்து போனதும் - கண்களை 'பளிச்'சென்று திறந்தாள்... கோபிகா. அவசர

அவசரமாய் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள்.

மணி 3.31.

''சித்ரா! பின்பக்கமா போய் பார்த்துட்டு வா....''

சித்ரா வேகவேகமாய் அரையிருட்டில் கலந்து - கதவை நோக்கிப் போனாள். தாழ்ப்பாளை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தாள்.

தெரு நிசப்தமாய் இருந்தது. சற்று முன்னால் குப்பைத் தொட்டிக்கு பக்கத்தில் படுத்திருந்த நாயைக்கூட இப்போது காணோம்.

''வெங்கடேஷ் வருவாரா மாட்டாரா...?''

யோசித்துக் கொண்டே நின்றவளின் பார்வையில் - தூரத்தில் பளிச்சிட்ட ஹெட்லைட் விளக்குகள் பட - உஷாரானாள்.

''வருவது வெங்கடேஷின் கார்தானா...?''

பக்கத்தில் வர வர ஊர்ஜிதமாயிற்று.

கையை ஆட்ட வேகம் குறைந்து நின்றது. சித்ரா கார் அருகே ஓடினாள்.

''என்ன வெங்கடேஷ்... இவ்வளவு சாவகாசமா வர்றீங்க...?''

''ஸாரி சித்ரா...வழியில ரெயில்வே கேட்டை மூடிட்டான். கோபிகா எங்கே ரெடியா இருக்காளா...?'

''அவ ரெடியாகி இருபது நிமிஷமாச்சு...''

''யார்க்கும் எந்த சந்தேகமும் வந்துடலையே?''

''ஊ...ஹூம்...''

''சரி... கோபிகாவை வரச்சொல்லு...''

சித்ரா உள்ளே ஓடினாள். அந்த நிமிஷம் முடிவதற்குள் கோபிகா பட்டுச்சேலை சரசரக்க - வேகவேகமாய் நடந்து வந்தாள். வெங்கடேஷ்



காரின் பின்பக்கத் கதவை விரிய திறந்து வைத்திருக்க - சட்டென்று உள்ளே நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

கார் புறப்பட்டு - வேகம் பிடித்தது. தெரு முனையைத் தாண்டியதும் கோபிகா கேட்டாள், ''என்ன வெங்கடேஷ்...? இப்படி பண்ணிட்டீங்க...?''

''நான் என்ன பண்ணட்டும்...? இந்த கார் நாப்பது மைலுக்கு மேலே போகமாட்டேங்குது? போதாக்குறைக்கு ரயில்வே கேட்டை வேற போட்டுட்டான்.''

''நான் எப்படி பயந்து போயிட்டேன் தெரியுமா...?''

''நீ போட்ட தலைவலி நாடகத்தை உங்கப்பாவும் அம்மாவும் நம்பினாங்களா... இல்லையா...?''

''நம்பிட்டாங்க...''

''சித்ராவுக்கு ஒரு பெரிய கும்பிடா போட்டு நன்றி சொல்லணும்.''

பிரதீப் கோபமாய் எறிட்டான்.

''ஏண்டா... எனக்கு நன்றி சொல்ல மாட்டியா...? ராத்திரி ரெண்டு மணியிலிருந்து - உனக்காக தூக்கத்தைத்தியாகம் பண்ணிட்டு - கார் ஓட்டிகிட்டு வர்றது உனக்கு பெரிய காரியமா படலையா...?''

கோபிகா சிரித்தாள். ''மிஸ்டர் பிரதீப்! உங்களுக்கு நான் ஸ்பெஷலா நன்றி சொல்றேன் போதுமா...?''

கார் மெயின் ரோட்டுக்கு வந்து - குளூர் ஏர்போர்ட் நோக்கி அந்த குளிர்காற்றில் வேகம் பிடித்தது.

''கோபிகா...''

''ம்...''

''இப்படி திருட்டுத்தனமா... என்கூட ஓடி வர்றதுக்கு உன்... மனசு கஷ்டப்படுதா...?''

''நோ... நோ....''

''இன்னும் கொஞ்ச நேரத்துல கல்யாண மண்டபம் அமளி துமளிபடும்...''

''படட்டுமே...''

''நீ இந்த நகைகளையெல்லாம் கழட்டி வெச்சுட்டு வந்திருக்கலாம்...''

''அலங்காரம் பண்ணிக்காமே இருந்தா அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சந்தேகம்... வருமே...?''

''சென்னை போய்ச் சேர்ந்ததுமே உன்னோட நகைகளையெல்லாம் கழற்றி ரெஜிஸ்டர்ட்... போஸ்ட் பார்சல்ல உங்க வீட்டுக்கு அனுப்பிடணும்...''

''எதுக்காக அனுப்பணும்...?''

''எனக்கு வேண்டியது நீதான். இந்த நகைகளில்லை...''

''இதெல்லாம் எனக்கு போட்டதுதானே...?''

''இருக்கலாம்... ஆனா... அதுக்கு நீ உரிமை கொண்டாட வேண்டாம். நாளைக்கே இந்த நகைகளை கழட்டி அனுப்பிடணும்...''

''சரி... அனுப்பிடலாம். நமக்கு சென்னை ஃபிளைட் எத்தனை மணிக்கு?''

''அஞ்சு... பத்து...''

வெங்கடேஷ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே

காரின் வேகம் குறைந்தது.

''என்னடா...?''

''ரோ... ரோட்டைப் பாரு...''

பார்த்தான்.



ரோட்டின் மையத்தில் - ஒரு இன்ஸ்பெக்டர் நின்று - கையை ஆட்டிக் கொண்டிருந்தார்.



## 6

கல்யாண மண்டபம் நிரம்பி வழிந்து கொண்டிருக்க, வரவேற்புக்காக வாசலில் நின்றிருந்த பங்கஜம் கணவரிடம் கேட்டாள்.

''மணி என்னங்க...?''

''மூணு அம்பது...''

''நான் போய் அந்தக் கழுதையை பார்த்துட்டு வர்றேன்...''

''ஏண்டி... குழந்தையை நல்ல நாளும் அதுவுமா கரிச்சு கொட்றே...? உனக்கு தலைவலி வந்தா என்ன பாடு படுத்திடறே...?''

பங்கஜம் அங்கிருந்து நகர்ந்து - மாடிக்கு வந்து - கோபிகா இன்னும் வரவில்லையென்று தெரிந்ததும் - கோபமாய் - பின் பக்கத்து ரூமை நோக்கிப் போனாள்.

கதவு லேசாய் சாத்திக் கிடக்க - தள்ளினாள்.

உள்ளே சித்ரா காப்பியை டம்ராவில் ஊற்றி ஆற்றிக் கொண்டிருந்தாள்.

''எங்கடி அவ...''

''கோபிகாதானே...? பாத்ரூம் போயிருக்கா...''

''எந்த பாத்ரூமுக்கு...?''

''மாடியில் இருக்கிற அட்டாச்சட் பாத்ரூமுக்குத்தான்.''

''அந்த ரூமுக்கு போய்ட்டுதானே வர்றேன்... அங்கே வந்த மாதிரி தெரியலையே...?''

''அங்க போறதாத்தான் என்கிட்டே சொன்னா...? வாந்தி வர்ற மாதிரி இருக்கு.. நான் பாத்ரூம் போறேன். நீ சமையல்கட்டுக்குப் போய்

- காப்பியை வாங்கிட்டு வந்து - ஆத்தி வைன்னுட்டு போனா...! அவ அப்படி போனதும் நான் சமையல் கட்டுக்கு போய் - காப்பியை வாங்கிட்டு வந்து அவளுக்காக ஆத்திட்டிருக்கேன்.... வாங்க காப்பியோடு மாடி ரூமுக்கே போய் பார்க்கலாம்...''

பங்கஜம் பொரிந்து கொண்டே நடந்தாள்.

''மணையில் உட்காரப்போற நேரத்துல இவ இப்படி அழிச்சாட்டியம் பண்றாளே...! ஊர் உலகத்துல... யார்க்கும் தலைவலி வந்ததில்லையா... என்ன...?''

இருவரும் மாடியறைக்குள் நுழைய விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளங்களில் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்த பெண்கள் கண்ணில் பட்டார்கள். பங்கஜம் நேராகப் போய் - பாத்ரூம் கதவைத் தள்ளிப் பார்த்தாள்.

கதவு வெறுமனே உள்ளே போயிற்று.

''என்னடி...? பாத்ரூம்ல அவளைக் காணோமே...?''

''இங்கதானே போறதா சொன்னா...''

பங்கஜம் உறவுக்கார பெண்களிடம் திரும்பினாள். ''ஏண்டி மரகதம்...! கோபிகா இங்கே வந்தாளா...?''

''வரலையே...''

''அவ இங்கே வந்தாளாமே...?''

''வந்திருந்தா.. எங்க உண்ணுல படாமே இருந்திருப்பாளா?''

''வேற பாத்ரூம் பக்கம் போயிட்டாளோ என்னவோ...?''

சித்ரா அடித்துச் சொன்னாள். ''அவ மாடிக்குப் போனதை நான் பார்த்தேன்...! பார்த்துட்டுதானே காப்பி எடுத்துட்டு வரப் போனேன்...''



''இந்த மண்டபத்துல வேற பாத்ரூம் எங்கேயிருக்கு?''

''பின்னாடி ஒண்ணு இருந்ததே...''

''அது சமையல் ஆட்களுக்காக...! அவ அங்கே போயிருக்க மாட்டா...''

''அதெப்படி சொல்ல முடியும்...? நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்...'' - யாரோ ஒரு அம்மாள் மண்டபத்தின் பின்பக்கம் இருந்த பாத்ரூமை நோக்கி ஓடினாள்.



## 7

இன்ஸ்பெக்டர் ரோட்டின் குறுக்கே நின்று - கையை ஆட்டிக் கொண்டிருக்க - வெங்கடேஷும் கோபிகாவும் பதட்டமானார்கள்.

''பிரதீப்! இப்ப என்ன பண்றது...?''

''என்ன பண்றதா...? அவர்க்குப் பக்கத்துல கொண்டு போய் நிறுத்திட வேண்டியததான்...? அவர் கேட்கிற கேள்விகளுக்கு சாமார்த்தியமா ஏதாவது ஒரு பதிலும் சொல்ல வேண்டியது தான்.''

''அப்படீன்னா... நீ வாயை திறக்காதே...! இன்ஸ்பெக்டர் எதைக் கேட்டாலும் நான் பேசிக்கிறேன். நீ எதையாவது உளறி தொலைச்சுடாதே...! வாயை மூடிகிட்டு 'கம்'ன்னு இரு...''

வெங்கடேஷ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - கார் இன்ஸ்பெக்டர்க்கு பக்கத்தில் போய் நின்றது. அவர் குனிந்து கார்க்குள் எட்டிப் பார்த்தார்.

''எங்கே போறீங்க...?''

''ஏர்ஃபோர்ட் ஸார்...''

''யார் இந்தப் பொண்ணு...?''

''எ... என்னோட மிஸஸ் சார்...''

''நீ... நீங்க ஒரு உதவி பண்ணனும்...''

''எ... என்ன ஸார்...?''

''டி.எஸ்.பி. அவசரமா ஏர்ஃபோர்ட் குவார்ட்டர்ஸ் போகணும். அவரை குவார்ட்டர்ஸுக்கு பக்கத்துல ட்ராப் பண்ணிடறீங்களா...?''

''வித் பிளஷர் ஸார்...''

''காரை ரோட்டோரமா ஒதுக்கி நிறுத்துங்க நான் டி.எஸ்.பியை கூட்டிட்டு வர்றேன்'' சொல்லிவிட்டு ரோட்டின் வலது பக்கத்தில் ஆர்ச் கட்டியிருந்த போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் போனார்.

மூன்று பேரும் புன்சிரிப்புகளோடு ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''பயந்தே போயிட்டோம்... லிப்ட் கேஸு...''

''வெங்கடேஷ்...!''

''என்னடா...?''

''நீ பின்சீட்டுக்கு போயிடு...! டி.எஸ்.பி. ஃப்ரெண்ட்ல உட்காரட்டும்...''

''டி.எஸ்.பி.கார்ல இருக்கும்போது யாரும் நெர்வஸ் ஆயிடக்கூடாது. சில போலீஸ்காரங்களுக்கு மூஞ்சியைப் பார்த்தாலே... விபரம் புரிஞ்சுடும்...''

''ஒண்ணும் பேசாதே... வர்றாங்க...''

யூனிபார்மை தவிர்த்திருந்த - அந்த டி.எஸ்.பி.நல்ல உயரத்தில் மலையாள நடிகர் மம்முட்டியை ஞாபகப்படுத்திக் கொண்டு - வேகவேகமாய் காரை நோக்கி இன்ஸ்பெக்டரோடு பேசியபடியே வந்தார்.

''நீங்க என்ன ஸ்டெப்ஸ் எடுக்கணுமோ.. அதை தயவு தாட்சண்யம் பார்க்காமே எடுத்துடுங்க... பின்னாடி எந்த பிரச்னை வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்.



''ஊர்ல அவர்க்கு நல்ல சப்போர்ட் மதிப்பு... இருக்கு ஸார்...?''

''உங்ககிட்டே சட்டம் இருக்கே...?''

''அப்படீன்னா... அரெஸ்ட் பண்ணிடலாமா ஸார்...?''

''பண்ணி ரெண்டு நாள் உள்ளே வையுங்கள்...! இந்தக் கார்தானா...?''

''ஆமா... ஸார்...''

காரின் முன்பக்கக் கதவை திறந்துவிட்டான் பிரதீப். ''வெல்கம்... ஸார்...''

''உங்களுக்கு தொந்தரவு குடுத்துட்டேன்.''

''நோ... ஸார்... இட்ஸ்... எ... ப்ளஷர்...''

டி.எஸ்.பி. முன்சீட்டுக்கு வந்து கதவைச் சாத்தினார். வெளியே இன்ஸ்பெக்டர் விறைப்புக்கு வந்து - நெற்றியில் சல்யூட்டை பதிக்க கார் புறப்பட்டது. ஐம்பதடி நகர்ந்ததும் - டி.எஸ்.பி.பின்னால் திரும்பிப் பார்த்து - வெங்கடேஷிடம் கேட்டார்.

''ஏர்ஃபோர்ட்டா போறீங்க...?''

''ஆமா... ஸார்...''

''எந்த ஃப்ளைட்...?''

''சென்னை போகிற வாயுதூத்...''

''குப்பை லாரி சர்வீஸும், வாயுதூத்தும் ஒண்ணு... எஞ்சின் மாவுமில் மாதிரி சத்தம் போடுமே...! ஆமா... என்ன பிசினஸ் பண்ணிட்டிருக்கீங்க...?''

''எனக்கு பிசினஸ் இல்லை... ஸார், ஒரு மருந்து கம்பெனியில் மெடிக்கல் ரெப்பா... இருக்கேன்...''

''அவங்க உங்க மிஸஸ்ஸா...?''

''ஆமா... ஸார்...''

''ராத்திரி நேரத்துல.. இவ்வளவு நகைகளை போட்டுக்கிட்டு ஜர்னி பண்றது ரொம்பவும் ரிஸ்க்.'

''சென்னையில ஒரு ஃப்ரெண்டுக்கு கல்யாணம் ஸார். நேத்திக்கு ராத்திரி ட்ரெயினை தவற விட்டுட்டோம்... வேற ட்ரெயினும் இல்லாததினாலே... காலையில வாயுதூத்தை பிடிக்க வேண்டிய நிலைமை... முகூர்த்தம் ஒன்பது மணிக்கு. சென்னை போய் சேர்ந்து - ஹோட்டல் ரூம் எடுத்து - குளிச்சு ட்ரெஸ் பண்ண அவகாசமில்லை ஸார். அதான் வீட்ல இருந்தே ட்ரஸ் பண்ணி ரெடியாயிட்டோம்...''

''ஃப்ளைட் எத்தனை மணிக்கு...?''

''அஞ்சு பத்துக்கு ஸார்...''

''இந்தக் கார் யாரோடது?''

''என்னோடது ஸார்...'' பிரதீப் சொன்னான்.

''நீங்க என்ன பண்றீங்க...''

''ஒரு வெர்மிஸெல்லி பேக்டரி வெச்சு நடத்திட்டிருக்கேன் ஸார்.'' கார் கான்க்ரீட் ரோட்டிலட் பத்து நிமிஷ நேரம் நீந்தியதும் - ரோட்டின் இடது பக்கம் கும்பலாய் வந்த ஏர்ஃபோர்ஸ் குவாட்டர்ஸ் கட்டிடங்களைக் காட்டி - ''நியரிங் மை ப்ளேஸ். அந்த மூணாவது எலக்ட்ரிக் போஸ்ட்டுக்கு பக்கத்துல காரை நிறுத்திக்குங்க ப்ளீஸ்'' என்றார் டி.எஸ்.பி.

பிரதீப் காரின் வேகத்தைக் குறைத்து - எலக்ட்ரிக் போஸ்ட் அருகே நிறுத்தினான். டி.எஸ்.பி.மறுபடியும் நன்றி சொல்லி - கீழே இறங்கிக் கொண்டதும் - கார் ஏர்ஃபோர்ட்டை நோக்கி புறப்பட்டது.

## 8



**நா**தஸ்வரமும் தவிலும் ஓய்ந்து போயிருக்க - கல்யாண மண்டபம் ஒரு மோசமான நிசப்தத்தில் இருந்தது. முகூர்த்தத்திற்கு வந்திருந்த ஜனக் கூட்டம் சின்ன சின்னத் தீவுகளாய் பிரிந்து -



கிசுகிசுப்பாய் பேசிக் கொண்டிருக்க - மாப்பிள்ளைக்கு அப்பா தேவராஜன் - குரு மூர்த்தியை கோபமாய் கேட்டுக் கொண்டிருந்தார்.

''என்னங்க இதெல்லாம்?''

''எ...எம்பொண்ணு... இ...இப்படி செய்வான்னு நா...நான் எதிர் பார்க்கலை...''

''இப்படி திருட்டுத்தனமா... ஓடிப்போறவ... எதுக்காக கல்யாணத்தை பண்ணிக்கிறேன்னு ஒத்துக்கணும்...? எங்க மூஞ்சியில கரியை பூசணும்...?''

''மன்னிச்சுக்குங்க.''

குருமூர்த்தி கைகளை கூப்பினார். மாப்பிள்ளைக்கு அம்மாக்காரி ஆக்ரோஷமாய் குறுக்கிட்டாள். ''உங்க குடும்பம் ஒழுக்கமா இருக்கும்னு நினைச்சுத்தான் பெண் எடுக்க வந்தோம். ஆனா உங்க பொண்ணு இப்படி ஓடுகாலியா இருப்பாள்னு கொஞ்சம் கூட நினைச்சு பார்க்கலை. நல்லவேளை தாலி கட்டிகிட்டு ஓடலை...''

''அம்மா...''

''மாப்பிள்ளை சிவா முன்னால் வந்தான். ''அந்தப் பொண்ணு இப்படி பண்ணிட்டு போவான்னு அவங்களுக்கு எப்படி தெரியும்..? ஏற்கெனவே நொந்து போயிருக்கிற அவங்களை... நீ வேற வார்த்தைகளை வீசி குத்தாதேம்மா... நம்ம ஜனங்களையெல்லாம் உடனே புறப்பட்டு ஊர் போய் சேரச் சொல்லு... ஓடிப்போன பொண்ணைப் பத்தி பேசிட்டிருக்கிறதுல யார்க்கு என்ன லாபம்...?'' அம்மாவை கண்டித்த சிவா குருமூர்த்தியிடம் வந்தான்.

''ஸார்...''

குருமூர்த்தி கலங்கிய கண்களோடு அவனை ஏறிட்டார்.

''உங்க பொண்ணு எங்கே போயிருப்பான்னு நினைக்கறீங்க...?''

''தெ...தெரியலை...''

''என்னோட அனுமானம்... அவ யாரை யாவது விரும்பியிருக்கலாம். அவ விருப்பத்தை தெரிஞ்சுக்காமே... நீங்க இந்த கல்யாண ஏற்பாட்டை பண்ணியிருக்கீங்க... அவளுக்கு இந்த கல்யாணத்துல விருப்பமா இல்லையான்னு கேட்டிருக்கணும்...''

''கே...கேட்டோம்...''

''ஏன்... பொய் சொல்றீங்க...!'' சேலைத் தலைப்பால் வாயை பொத்தி விசும்பிக் கொண்டிருந்த பங்கஜம் - பட்டென்று நிமிர்ந்து அழுகைக் குரலில் - சிவாவைப் பார்த்து சொன்னாள். கோபிகா ஒரு பையனை விரும்பறதா... அரசல் புரசலா... எங்க காதுக்கு செய்தி வந்ததுமே... நாங்க உஷாராகி அவளை வெளியே எங்கேயும் அனுப்பாமே... வீட்டுக் குள்ளேயே... சிறை... வெச்சிருந்தோம்...''

''அந்தப் பையன் யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''கோபிகாகிட்டே விசாரிச்சீங்களா?''

''விசாரிச்சோம்...''

''என்ன சொன்னா...?''

''அப்படியெல்லாம் எதுவும் கிடையாதுன்னு சொல்லிட்டா...! நீங்க வந்து பெண் பார்த்துட்டு போனதுமே... கல்யாணம் வேண்டாம்ன்னு சொன்னா... நாங்கதான் வற்புறுத்தி அவளை கல்யாணத்துக்கு சம்மதிக்க வெச்சோம்...''

''தப்பு பண்ணிட்டீங்க...! உங்க பொண்ணுக்கு இந்த கல்யாணத்துல விருப்பமில்லை யன்னா... உடனே அந்த கல்யாண ஏற்பாட்டை நிறுத்தியிருக்கணும். அப்படி நிறுத்தியிருந்தா... இந்த அவமானம் உங்களுக்கு நேர்ந்திருக்காது...'' சொன்ன சிவா தன் கையில் கட்டியிருந்த



கங்கணத்தைக் கழற்றி - குருமூர்த்தியிடம் கொடுத்துவிட்டு - மண்டபத்திலிருந்த தன்னுடைய அறையை நோக்கிப் போனான்.

பங்கஜம் கணவரை ஏறிட்டாள்.

''என்னங்க...!''

''ம்...''

''போலீஸுக்கு போன் பண்ணி தகவலைச் சொல்லுங்க.''

''இந்த விவகாரம் போலீஸ் வரைக்கும் போகணுமா... பங்கஜம்?''

''பின்னே...! அந்த சண்டாளி எங்கே யாரோட போயிருக்கான்னு எப்படி தெரியும்...?''

''அவ எக்கேடோ யார் கூடவோ போகட்டும்... இவ்வளவு பெரிய அவமானத்தையும், தலைக் குனிவையும் ஏற்படுத்தினவ... இனிமே உனக்கும் எனக்கும் மகளா இருக்க முடியாது... இப்பேர்ப்பட்ட பொண்ணை பெத்ததுக்காக அடி வயித்துல - கொள்ளிக்கட்டையை எடுத்து ஒரு இழுப்பு இழுத்துக்கோ...''

பங்கஜம் மண்டியிட்டு உட்கார்ந்து பெருங் குரலெடுத்து அழ ஆரம்பித்தாள். மாப்பிள்ளை வீட்டு ஜனம் கலைந்து கொண்டிருந்தது.



## 9

**வா**யுதூத் விமானம் சென்னையைத் தொட்டபோது - காலை மணி ஆறு முப்பது. குளிர்ந்த காற்று ஜில்லிப்பாய் வீசிக் கொண்டிருக்க - கோபிகாவும், வெங்கடேஷும் ஏர்ப்போர்ட் லௌஞ்சில் நடந்து - வெளியே வந்தார்கள்.

''இந்நேரம் கல்யாண மண்டபம் காலியாகி யிருக்கும்.''

''எம்மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு வெங்கடேஷ்.''

''வெளியே துணிச்சலா வந்துட்ட பிறகு... வீட்டைப் பத்தி நினைக்கவே கூடாது...''

''முடியலையே..?''

''எல்லாம் முடியும்.''

''நம்ம காதலைப்பத்தி அப்பா அம்மாகிட்டே சொல்லியிருக்கலாமோன்னு இப்ப ஒரு எண்ணம்.''

''சொல்லியிருந்தா.. வீட்லேயும், மண்டபத்திலேயும் காவல் பலமாகியிருக்கும்... இப்படி தப்பிச்சும்... வெளியே... வர முடியாது...''

டாக்ஸி வரிசைக்கு வந்தார்கள்.

கொஞ்சம் வயதான டிரைவரை நெருங்கினான் வெங்கடேஷ்.

''டாக்ஸி வருமா...?''

''எங்க ஸார் போகணும்...?''

''திருநீர் மலைக்கு...''

''போய்ட்டு வரணுமா...?''

''வேண்டாம். போறதுக்கு மட்டும்தான் வரும்போது பஸ்ஸுல வந்துடுவோம்.''

''கிலோ மீட்டர்க்கு ரெண்டு ரூபா ஆகும் ஸார்...''

''வெங்கடேஷ் பேரம் பேசாமல் - டாக்ஸியின் பின்சீட்டுக் கதவைத் திறந்தான். இருவரும் உள்ளே போனார்கள்.

டாக்ஸி புறப்பட்டது. ஏர்ஃபோர்ட்டைத் தாண்டியதும் வேகம் எடுத்தது. கோபிகா வெங்கடேஷின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''என்ன?'' கிசுகிசுத்தான் வெங்கடேஷ்.

''பயம்மாயிருக்கு...''

''எதுக்கு பயம்...?''



''என்னமோ தெரியலை.. ஃபிளைட் ஏறுகிற வரைக்கும் இருந்த அந்த தைரியம், துணிச்சல் இப்போ இல்லை.''

''சென்டிமெண்டலா எல்லா பெண்களுக்கும் வர்ற கடைசி நேர பயம் இது. கழுத்துல தாலி விழுந்தா சரியா போயிடும்...''

''இந்நேரம்... அம்மா.... அப்பா...'' கண்களில் 'ப்ளக்'கென்று நீர்க்குடங்கள் உடைந்தன.

''ஏ.ஏய்... கோபிகா... என்ன இது...? நோ... நோ... ஒரு புது வாழ்க்கையை தொடங்கப் போகிற நேரத்துல... ஓ... மை குட்னஸ்...! நீ அழறது எனக்கு ஆச்சர்யமாயிருக்கு...''

கோபிகா கர்ச்சீப்பால் கண்ணீரை ஒற்றிக் கொண்டாள்.

''வெங்கடேஷ்...!''

''ம்... என்ன...?''

''திருநீர்மலையில நம்ம கல்யாணம் முடிஞ்சதும்...''

''முடிஞ்சதும்...''

''ஊருக்கு போயிடுவோம்...''

''ஊருக்கா...''

''ம்...''

''போயி...?''

''மொதல்ல எங்க அப்பா அம்மா கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கணும்...''

''உடனே போய் அவங்க எதிர்ல நின்னா கோபம்... அவங்களுக்கு கோபம் வராதா...?''

''கோபம் வந்தாலும் பரவாயில்லை.''

''கோபிகா! உனக்கு திடீர்னு இப்ப என்னாச்சு...''

''என்னமோ தெரியலை வெங்கடேஷ்! பண்ணின தப்புக்கு அம்மா அப்பா கால்ல விழுந்து அழணும் போலிருக்கு...''

''வெங்கடேஷ் அவளை வியப்பாய் - பார்க்க - டாக்ஸி வேகமாய் சீறிக்கொண்டிருந்தது.

## 10



''சிவா... இது உனக்கு பெரிய அவமானம்.''

''உனக்கென்ன குறைச்சல்? அழகில்லையா? பணமில்லையா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எத்தனையோ பெண்கள் காத்திட்டிருந்தப்போ... இந்த ஓடுகாலியை போய் ஏன் செலக்ட் பண்ணினே...?''

''முகூர்த்தம் ஒரு மணிநேரம் இருக்கும்போது இப்படி உன் மூஞ்சியில கரியைப் பூசிட்டாளே...''

''சிவாவைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த நண்பர்கள் கோபத்தில் வார்த்தைகளை உதிர்க்க சிவா உள்ளுக்குள் எரிமலையாகிக் கொண்டிருந்தான். இடம் அவனுடைய பங்களாவின் தனியறை. கல்யாண மண்டபத்திலிருந்து திரும்பி இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது - நண்பர்களை ஏறிட்டபடி சொன்னான் சிவா.

''இந்த அவமானத்திற்கு அந்த கோபிகா பதில் சொல்லத்தான் போறா...! கல்யாண மண்டபத்துல என்னோட கோபத்தை காட்டிக்காததுக்கு காரணம்... கொஞ்சம் சாவகாசமா உட்கார்ந்து - யோசனை பண்ணி - ஒரு நியாயமான தண்டனையை கொடுக்க முடிவு பண்ணிட்டேன். தண்டனை குடுக்கிறதுக்கு முந்தி - எவன் அவளை இழுத்துக்கிட்டு ஓடினான்னு தெரியணும்...''

''அதைக் கண்டுபிடிச்சுடலாம்...''

வேலைக்காரி பாக்கியம் அறை வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள். ''அய்யா! உங்களுக்கு போன் வந்திருக்கு...''



''போன்ல யாரு...?''

''தெரியல்லீங்கய்யா...''

சிவா எழுந்து - உள் அறைக்கு போய் - மேஜைமேல் கவிழ்ந்து கிடந்த ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

''ஹலோ...''

''பேசறது யாரு சிவாவா...?''

''ஆமா...''

''சிவா! நான் விக்டர். சென்னை ஏர்ஃபோர்ட்டிலிருந்து பேசறேன்...''

''என்ன விக்டர்...?''

''உன்னோட கல்யாணம் நடந்திருக்காதே?''

''ஆமா... உனக்கெப்படி தெரியும்...?''

''அந்தப் பொண்ணை... பேரு கோபிகா தானே...? அவளை பத்து நிமிஷத்துக்கு முந்தி ஏர்ஃபோர்ட்ல பார்த்தேன். உன்னோட கல்யாண இன்விடேஷன்ல அந்தப் பொண்ணோட போட்டோ இருந்ததினாலே... என்னால ஈஸியா அடையாளம் கண்டுபிடிக்க முடிஞ்சது. அவளும் இன்னொரு யூத்தும் வாயுதூத்திலிருந்து இறங்கி வரும்போதே பார்த்துட்டேன். பட்டுபுடவை உடுத்தி... நகைகளோடு... ஒரு கல்யாணப் பெண் மாதிரியே இருந்தா அவ. உன்னோட கல்யாண ரிசப்ஷன்ல கலந்துக்கிறதுக்காக - கோயமுத்தூர் வர இருந்த எனக்கு... அந்தப் பெண்ணை இங்கே பார்த்ததும் எக்கச்சக்க ஆச்சர்யம். சிவா! வாட் ஹேப்பண்ட்...?''

''விக்டர்! நீ இப்போ எங்கிருந்து பேசறே?''

''ஏர்ஃபோர்ட்டிலிருந்து எஸ்.டி.டி. பூத்திலிருந்துதான்.''

''நீ எனக்கொரு உதவி பண்ணணும்.''

''என்ன சொல்லு.''

''அவங்க ரெண்டு பேரும் எங்கே போறாங்கன்னு கொஞ்சம் ட்ரேஸ் அவுட் பண்ணிச் சொல்றியா...?''

''ட்ரேஸ் அவுட் பண்ணிட்டேன். ஏர்ஃபோர்ட் கும்பலோடு கும்பலாய் அவங்க பின்னாடியே போய் அவங்க பேசினதை கேட்டுட்டேன்....''

''எங்கே போறாங்க...?''

''திருநீர்மலைக்கு... நான் இப்போ உன்கிட்ட பேசிட்டிருக்கிற நேரம் அவங்க டாக்ஸியில் போயிட்டிருப்பாங்க...''

''தகவல் சொன்னதுக்கு ரொம்ப நன்றி விக்டர்.''

''என்ன பிராப்ளம் சிவா...''

''அவ ஏற்கெனவே ஒருத்தனை காதலிச்ச விவகாரம் இப்பதான் வெளிப்பட்டிருக்கு. அந்தப் பொண்ணு விஷயத்தை என்கிட்ட சொல்லியிருந்தா... அதே கல்யாண மண்டபத்துல அவ இஷ்டப்பட்டவனுக்கே கல்யாணத்தை முடிச்சிருப்பேன். அந்தப் பொண்ணு அவசரப் பட்டுட்டா... இட்ஸ்... ஓ...கே... ரிஸீவரை வெச்சுடட்டுமா?''

சொல்லி ரிஸீவரை வைத்த - சிவா அறைக் கதவைச் சாத்திக் கொண்டு - மறுபடியும் வந்து ரிஸீவரை எடுத்து - சென்னை எஸ்.டி.டி.கோட் நம்பரையும் - ஒரு டெலிபோன் நெம்பரையும் சுழற்றி லைனைப் பிடித்தான். ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் கேட்டான்.

''அன்வர்ஷா...?''

* * *

டாக்ஸி திருநீர்மலை அடிவாரத்தை தொட்டபோது - கும்பலே இல்லை. சுட்டெரிக்கும் வெய்யிலின் காரணமாக - மலைப்படிகளில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரர்களும் காணாமல் போயிருந்தார்கள். டாக்ஸிக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு - வெங்கடேஷும் கோபிகாவும் மலையேற ஆரம்பித்தார்கள்.

''என்ன வெங்கடேஷ்! கூட்டத்தையே காணோம்...?''

''இந்த கோயிலுக்கு வர்றவங்களெல்லாம்... காலையிலேயே வந்துட்டு போயிடுவாங்க...''

''படி இப்படி சுடுது...! மலைக்கு மேல போய் சேர்றதுக்குள்ளே கால் வெந்துடும் போலிருக்கே.''

''வேகமா ஏறணும்...''

''இந்த பட்டுப் புடவையைக் கட்டிக்கிட்டு வேகமா ஏற முடியாதே?''

''என் கையைப் புடிச்சிக்கோ.'' கோபிகா வெங்கடேஷின் கையைப் பற்றிக் கொள்ள - இருவரும் மேலே கொஞ்சம் கொஞ்சமாய் உயர்ந்தார்கள்.

பாதி மலை ஏறுவதற்குள் - கோபிகா வியர்த்து ஒழுகினாள். நெற்றி குங்குமம் கரைந்து மூக்கில் சொட்டியது.

''வெங்கடேஷ்!''

''ம்...''

''எங்கேயாவது கொஞ்ச நேரம் உட்காரணும்.''

''அந்த மரத்துக்கு கீழே போய் உட்கார்ந்துக்கலாமா...?'' மலைப்படிகளை விட்டு - பக்கவாட்டில் பிரிந்து போன பாதையின் கடைசியில் கிளைகளை அடர்த்தியாக பரப்பிக்கொண்டு வளர்ந்திருந்த மரத்தைக் காட்டினான் வெங்கடேஷ்.

''ம்... போலாம்...''

இருவரும் அந்த பாதையில் நடந்தார்கள்.

''ஒரு வாட்டர் கேனை கொண்டு வந்திருக்கணும்.''

சின்னச் சின்ன பாறைகள் சுற்றிலும் சிதறி கிடக்க - அவற்றின் நடுவே பூவரசம் மரம் ஒன்று

கரும்பச்சை இலைகளோடும் - மஞ்சள் பூக்களோடும் குளிர்ச்சியோடும் வியாபித்திருந்தது.

''ஆஹ்ஹா! அருமையான இடம்...''

''ஏர்க்கண்டிஷன் ரூம்ல இருந்தாக்கூட இவ்வளவு குளிரச்சயா இருக்காது... ஒரு பத்து நிமிஷமாவது இங்கே உட்கார்ந்துட்டுதான் போகணும்...''

உட்கார்ந்தார்கள். அதே விநாடிகளில் -

## 11



திருநீர்மலையின் அடிவாரத்தில் - அந்த வெள்ளை நிற அம்பாசிடர் டாக்ஸி வந்து நின்றது. உள்ளே மொத்தம் நான்கு பேர்கள். எல்லோருமே இளைஞர்கள். படிப்பு வாசனை இல்லாதவர்கள். முகங்களில் மீசையும் தாடியும் ஒழுங்கில்லாமல் இருந்தது.

''செல்வம்.''

''என்ன...பரமு...''

''அவங்க ரெண்டு பேரும் இப்போ மலையேறிட்டிருக்கலாம்...''

''வேகமா போனா புடிச்சுடலாம்...! ஆனா தீர்த்து கட்டறதுக்கு இந்த மலை வசதிப்படாது... ஜனங்க வந்துட்டும் போயிட்டும் இருப்பாங்க.''

''இன்னிக்கு கும்பலையே காணோம்... முயற்சி பண்ணினா இங்கேயே முடிச்சுடலாம்...''

''பொண்ணோட பேரென்ன?''

''கோபிகா...''

''அவன் பேரு...?''

''வெங்டேஷ்...''

''பேசியபடி நமக்கு பணம் வந்துடுமா?''



''கண்டிப்பா...''

''பார்ட்டி... யாரு... பரமு...''

''எனக்கு நம்பகமானவன்தான்.''

''காரியத்தை முடிச்ச பின்னாடி சிக்கல் ஏதும் வராதே...?''

''இதோ பார் செல்வம்... நீ டாக்ஸியில் ஏறினதிலிருந்து அவநம்பிக்கையாவே பேசிட்டே வர்றே! எல்லா விபரத்தையும் உனக்கு சொல்லிடறேன். பார்ட்டி வேறுயாருமில்லை. நம்ம டெய்லரிங் மார்ட் அன்வர்ஷாதான். அன்வர்ஷாவுக்கும் - இன்னிக்கு காலையில கோபிகாவை கல்யாணம் பண்ணிக்க இருந்த மாப்பிள்ளை - சிவாவுக்கும் நல்ல ஸ்நேகம். முகூர்த்தத்துக்கு ஒரு மணி நேரம் இருக்கும்போது - அந்தக் கல்யாணப் பொண்ணு கோபிகா - மண்டபத்தைவிட்டு வெளியே வந்து வெங்கடேஷோட ஏர்ஃபோர்ட்டுக்கு வந்து வாயுதூத் ஃபிளைட்டை புடிச்சு சென்னை வந்துட்டா. ஏர்ஃபோர்ட்ல இருந்த சிவாவோட ஃப்ரெண்ட் ஒருத்தர் கோபிகாவையும் வெங்கடேஷையும் பார்த்துட்டு - சிவாவுக்கு போன் பண்ணி தகவல் சொல்ல - சிவா அங்கிருந்து நம்ம அன்வர்ஷாவுக்கு தகவல் குடுத்து காரியத்தை முடிக்கச் சொல்லியிருக்கார். காரியத்தை கச்சிதமா முடிச்சா கைக்கு ஒரு லட்சம் கிடைக்கும்... விஷயம் இதுதான். சிவா பெரிய பார்ட்டி. காரியத்துல துணிஞ்சு இறங்கலாம்.''

''ரெண்டு பேரை முடிக்கப் போறோம். பணம் கம்மி. இன்னும் ஜாஸ்தியா கேட்டிருக்கலாம்.''

''காரியத்தை முடிச்ச பின்னாடி உரிமையோடு கேட்டுக்குவோம்.''

''சரி... மலை ஏறலாமா?''

டாக்ஸியின் நான்கு பக்கக் கதவுகளையும் திறந்து கொண்டு அவர்கள் இறங்கி -

மலைப்படிகளை நோக்கி வேகவேகமாய் போக ஆரம்பித்தார்கள்.

## 12



வெங்கடேஷ் எழுந்தான். பின்பக்கம் ஒட்டியிருந்த மணலைத் தட்டிக் கொண்டு.

''இன்னும் ஒரு அஞ்சு நிமிஷம்...''

''ஊஹூம்... நீ சொன்ன பத்து நிமிஷம் காலாவதியாகி அதுக்கும் மேல ரெண்டு நிமிஷம் ஓடியாச்சு... கிளம்பு... கிளம்பு... வெய்யிலுக்கு பயந்து உட்கார்ந்திட்டிருந்தா.. கோயிலுக்கு போய்ச் சேர்ந்து கல்யாணத்தை முடிக்கிற தெப்போ? சொல்லிக் கொண்டே கோபிகாவின் தோள்பட்டைகளைப் பற்றி தூக்க முயன்றான் வெங்கடேஷ்.

''வேண்டாம் நான் எந்திரிச்சுக்கிறேன்.''

''ம்... எந்திரி.''

கோபிகா எழுந்த விநாடி -

பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

''அய்யா தர்மம்!''

இருவரும் திரும்ப - பார்வைக்கு அந்த பண்டாரம் கிடைத்தான். மொட்டை. காவி அங்கி, தோளில் நீளமாய் ஒரு பை. கையில் திருவோடு.

வெங்கடேஷ் ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து திருவோட்டில் போட்டுவிட்டு - நடக்க முயல - பண்டாரம் குரல் கொடுத்தான்.

''அம்மா.. தர்மம்.''

வெங்கடேஷ் புன்னகைத்தான்.

''நானும் அம்மாவும் ஒண்ணுதான்.''

''அதெப்படி ஒண்ணாக முடியும்? உங்களுக்குத்தான் இன்னும் கல்யாணமே



நடக்கலையே? கழுத்துல தாலி விழுந்த பின்னாடிதான் நீங்களும் அம்மாவும் ஒண்ணு.''

''வெங்கடேஷ் கோபமானான்.

''அதிகம் பேசிட்டிருக்காதே! போட்ட காசை வாங்கிட்டு போயிடு''

''அம்மாவை போடச் சொல்லுங்க.'' பண்டாரம் சிரிக்க - கோபமாய் ஏதோ பேச முயன்ற - வெங்கடேஷை கையமர்த்திய கோபிகா - தன்னுடைய மணிபர்ஸை எடுத்து ஒரு ரூபாய் நாணயத்தை போட்டாள். பண்டாரம் பற்களைக் காட்டினான்.

''எனக்கு வேண்டியது.. இந்த ஒரு ரூபாய் இல்லை.''

''பின்னே?''

''நீ போட்டிருக்கிற நகைகள்''

''என்னடா... சொன்னே?'' ஆத்திரமாய் பண்டாரத்தை நோக்கி பாய முயன்ற வெங்கடேஷ் - அதிர்ச்சியடிக்க நின்றான்.

திருவோட்டின் பின்னணியிலிருந்து அரையடி கத்தியொன்று பளிரென்ற உடம்போடு உயர்ந்தது.



## 13

நான்கு பேரும் படிகளில் மளமளவென்று ஏறினார்கள்.

''நம்ம அதிர்ஷ்டம்தான்... இன்னிக்கு கும்பலே இல்லை.''

''அப்படி சொல்லாதே! திடீர்ன்னு நாலைஞ்சு டூரிஸ்ட் பஸ்ஸுகள் வந்தா கும்பல் சேர்ந்துடும்.''

''சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நமக்கு சாதகமா இருந்தா காரியத்தை முடிப்போம். இல்லேன்னா

அவங்களை ஃபாலோ பண்ணி - அவங்க தங்கற இடத்தை தெரிஞ்சுகிட்டு அப்புறமா ஸ்டெப்ஸ் எடுப்போம்.''

''பொண்ணு என்ன கலர் பட்டுச் சேலையை கட்டியிருப்பான்னு சொன்னே செல்வம்?''

''ரோஜா நிற பட்டுச்சேலை''

''அன்வர்ஷா சொன்ன - ''அடையாளங் களை மறுபடியும் ஒரு தடவை சொல்லு....''

''பொண்ணு நல்ல சிவப்பு. மூக்குக்கு கீழே மேலுதட்டில் ஒரு மச்சம் இருக்கும். சுருட்டை முடி. அசப்புல பார்த்தா அந்த காலத்து வைஜெயந்தி மாலா மாதிரி இருப்பாளாம்...''

''தொட முடிஞ்சா நல்லாயிருக்கும்...''

அந்த எண்ணமெல்லாம் வேண்டாம்.''

''இந்த வெய்யில்ல அவங்க... சீக்கிரமா மலையுச்சிக்கு போயிருக்க முடியாது.''

நான்கு பேரும் - மூச்சு வாங்கிக்கொண்டு -

வேகவேகமாய் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு - படிகளில் ஏற ஆரம்பித்தார்கள்.

## 14



**கோ**பிகாவும் வெங்கடேஷும் - அதிர்ந்து போய் அந்த பண்டாரத்தையே பார்க்க - அவன் கத்தியோடு அவர்களை நெருங்கி நின்றான்.

''ம்... மளமளன்னு எல்லா நகைகளையும் கழட்டு. ஒரு நிமிஷ நேரத்துக்குள்ளே நகைங்க என் கைக்கு வரலைன்னா... ரெண்டு பேரையும் சொருகிடுவேன்...'' பளபளக்கும் கத்தியால் காற்றில் கோலம் போட்டான்.''

கோபிகா பயத்தோடு வெங்கடேஷைப் பார்க்க பண்டாரம் உறுமினான். ''ம்... சீக்கிரம். அவனைப் பார்த்து எந்த பிரயோஜனமும் இல்லை... நகைகளைக் கழட்டி என் கையில குடு..''

பண்டாரம் கோபிகாவைப் பார்த்து - பேசிக் கொண்டிருந்த வினாடியை - உபயோகப்படுத்திக் கொண்ட வெங்கடேஷ் குபீரென்று அவன் மேல் பாய்ந்தான். பண்டாரம் வினாடிக்கும் குறைவான நேரத்தில் சட்டென்று விலகிக் கொண்டு - தன் வலதுகால் முட்டியை மடக்கி - வெங்கடேஷின் அடிவயிற்றில் 'நெக்'கென்று இடிக்க - வெங்கடேஷ் வலியை மென்று - கண்கள் சொருகி - மல்லாந்தான். எழ முயன்றவனின் வயிற்றில் - மரண வலி உற்பத்தியாகி - அப்படியே சரிந்தான்.

பண்டாரம் தன் காவிக்கறை பற்களை காட்டி சிரித்தபடியே கோபிகாவிடம் திரும்பினான்.

''இவனை என்னாலே எதுவுமே பண்ண முடியும் இப்போ! இந்தக் கத்தியை இவன் வயித்துல சொருகட்டுமா...?''

''வே... வேண்டாம்...''

''வேண்டாம்ன்னா நகைகளைக் கழட்டு.''

கோபிகா மளமளவென்று நகைகளை கழற்றி ஒவ்வொன்றாய் பண்டாரத்திடம் கொடுக்க - அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பைக்குள் போட்டுக் கொண்டான். கடைசியாய் காதில் இருந்த கம்மல்களை கழற்றி கொடுத்த போது - பண்டாரம் அவளுடைய கையைப் பற்றி இழுக்க வெகுண்டாள்.

''சீ... விட்றா... கையை...''

பண்டாரம் விடாமல் அவளை இழுத்தான். ''நீ ரொம்ப அழகா இருக்கே... மெல்லமா கட்டி பிடிச்சு ஒரு முத்தம் மட்டும் குடுத்துட்டு போயிடறேன்.''

''ராஸ்கல்! கையை விட்றா...''

''அட... விடாட்டி என்ன பண்ணுவே...?''

கத்தியை இடது கைக்கு மாற்றிக் கொண்டு - வலது கையால் - அவளை இறுக்கி அணைத்தான் பண்டாரம்.''

கோபிகாவின் வாய்க்கு நேரே பண்டாரத்தின் மணிக்கட்ட வாகாய் வர - பற்களால் கவ்வி - பலங்கொண்ட மட்டும் கடிக்க -

''ஸ்...ஸ்....ஸ்....சீ....! விடு....''

கோபிகா விடாமல் - இன்னமும் ஆக்ரோஷமாய் கடிக்க - மணிக்கட்டில் ரத்தம் சொட்டியது.

பண்டாரம் கையை உதற முயன்று முடியாமல் - குபீரென்று பொங்கின ஆத்திரத்தில் - இடது கையில் வைத்திருந்த கத்தியால் - கோபிகாவின் அடிவயிற்றில் 'ச்சத்'தென்று சொருகினான்.

கோபிகா விலுக்கென்று தலையை உயர்த்தி - கண்கள் ஸ்தம்பித்து சரிந்தாள். பண்டாரம் மலைச்சரிவின் இன்னொரு பக்கத்தை நோக்கி - பாறைகளில் தாவியும் - கீழே குதித்தும் ஓடி மறைந்தான்.

அடிவயிற்றில் குத்திட்ட கத்தியோடு - கோபிகாவின் உடல் ஸ்லோமோஷனில் துடித்துக் கொண்டிருக்க - வெங்கடேஷ் வலியோடு ஊர்ந்து... கொஞ்சம் கொஞ்சமாய் பக்கத்தில் வந்தான்.

''கோ...கோபிகா...''

''.....''

''கோ...பி...கா...''

அவளை நெருங்கி - அடிவயிற்றில் குத்திட்டு நின்ற கத்தியை இரண்டு கைகளாலும் பற்றி உருவினான். ரத்தம் முகத்தில் சூடாய் தெறித்தது - வெங்கடேஷின் மனதில் கோபம் கொப்பளிக்க - ரத்தம் சொட்டும் கத்தியோடு மெல்ல எழுந்து நின்று - அந்த பண்டாரத்தைத் தேட -



சிறுநீர் கழிப்பதற்காக - ஒரு செடியின் மறைவிடத்தைத் தேடிக்கொண்டு - அந்தப் பக்கமாய் வந்த பெண்ணொருத்தி - ரத்தம் சொட்டும் கத்தியோடு நின்றிருந்த வெங்கடேஷைப் பார்த்ததும் வீறிட்டு அலறினாள்.

அவளுடைய அலறலைக் கேட்டு -

மலையினின்றும் இறங்கிக் கொண்டிருந்த நான்கைந்து பேரும் ஏறிக் கொண்டிருந்த நான்கு பேரும் 'தபதப'வென்று ஓடி வந்தார்கள்.

வயிற்றில் உறைந்து போன ரத்தத்தோடு - கீழே விழுந்துகிடந்த கோபிகாவை பார்வையில் வாங்கினவர்கள் - வெங்கடேஷின் மேல் பாய்ந்து அவனை அமுக்கினார்கள். ''அந்த பொண்ணை ஏண்டா கொன்னே...?''



## 15

அந்த பிற்பகல் நேரத்தில் - சிவாவின் அறையில் - டெலிபோன் துடிக்க - அவன் அறைக் கதவைச் சாத்திவிட்டு வந்து ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''சிவா! நான் அன்வர்ஷா...?''

''என்னாச்சு...?''

''நாம நினைச்சது ஒண்ணு. நடந்தது ஒண்ணு.''

''நீ என்ன சொல்றே...?''

''கோபிகாவை வெங்கடேஷே குத்திட்டான்....!''

''என்னது? கோபிகாவை வெங்கடேஷே குத்திட்டானா?'' உளறாமே சொல்லு.''

''நான் உளறலை... சிவா...! கோபிகாவையும் வெங்கடேஷையும்... தேடிகிட்டு திருநீர் மலைக்குப் போன என்னோட ஆட்கள் அந்த

சம்பவத்தை நேர்லேயே பார்த்திருக்காங்க. மலைக்குப் போகிற படிகளை விட்டு விலகி செடி கொடிகள் நிறைஞ்ச ஒரு பகுதிக்கு கோபிகாவை கூட்டிகிட்டு போய் கத்தியோலே குத்தியிருக்கான்..."

"கோபிகா செத்துட்டாளா...?"

"ரொம்பவும் ஆபத்தான நிலைமையில ஹாஸ்பிடல்ல சேர்க்கப்பட்டிருக்கா... பிழைக்க சான்ஸ் இல்லேங்கிறது டாக்டர்ஸ் ரிப்போர்ட்..."

"அவளை எதுக்காக குத்தினானாம்?"

"அவன் அவளைக் குத்தலைன்னு போலீஸ்ல சொல்லியிருக்கான்."

"பின்னே யார் குத்தினாங்களாம்?"

"எவனோ ஒரு பண்டாரம் வந்து கத்தியைக் காட்டி மிரட்டி கோபிகாவோட நகைகளையெல்லாம் கழட்டி வாங்கிட்டு கத்தியால குத்திட்டு போயிட்டானாம். அவன் சொன்ன கதையை போலீஸ்ல யாரும் நம்பலை. விசாரணை நடந்துட்டிருக்கு..."

"அன்வர்ஷா..."

"ம்..."

"வெங்கடேஷ் கோபிகாவை கத்தியால குத்தினதை உன்னோட ஆட்கள் நேர்ல பார்த்தாங்களா...?"

"இல்லை...! அந்தப் பக்கமா யூரின் பாஸ் பண்ணப் போன ஒரு பெண் வெங்கடேஷ் ரத்தம் வடியற கத்தியோடு - நின்னுட்டிருந்ததைப் பார்த்து அலறியிருக்கா. அந்த சத்தத்தைக் கேட்டுத்தான் என்னோட ஆட்கள் போயிருக்காங்க..."

"அப்படீன்னா சம்பவத்தை யாரும் நேர்ல பார்க்கலை?"

"ஆமா..."



"வெங்கடேஷ் சொன்னது ஏன் உண்மையா இருக்கக் கூடாது?"

"சிவா... நீ என்ன சொல்றே...?"

"வெங்கடேஷ் கோபிகாவை கத்தியாலே குத்தியிருக்கமாட்டான். அவன் சொன்ன மாதிரி பண்டாரம் எவனாவது வந்திருக்கலாம்..."

"போலீஸ் அதை நம்பலை..."

"போலீஸ் இப்போ அதை நம்பாமே இருக்கலாம்... ஆனா நாளைக்கு கோபிகாவுக்கு 'கான்ஷியஸ்' வந்து வாக்குமூலம் குடுத்தா... பண்டாரம் வந்தது உண்மைன்னு ஆயிரும்."

"இப்ப... என்ன பண்றது சிவா...?"

"அந்த வெங்கடேஷ் இந்த வலையிலிருந்து தப்பிக்கக் கூடாது. அதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணு - நான் உடனே சென்னை புறப்பட்டு வர்றேன்."

"சீக்கிரமா... வா..."

"அடுத்த ப்ளைட்லயே வர்றேன்."



## 16

**போ**லீஸ் ஸ்டேஷன் வாசலில் - போலீஸ் ஜீப் வந்து நிற்க - டி.எஸ்.பி.பிரகாசம் தன் பருமனான உடம்பைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்க - ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் வரதராஜ் வேகவேகமாய் - வெளியே வந்து - சல்யூட்டோடு வரவேற்றார்.

"என்னய்யா சொல்றான் அந்த ஆள்...?"

"அந்தப் பொண்ணை நான் குத்தலைன்னு சொல்றான் ஸார்."

"உபச்சாரம் பண்ணியா?"

"பண்ணிப் பார்த்துட்டேன் ஸார்."

''பலமா பண்ணினியா...?''

''லத்தி ஒண்ணு ரெண்டா உடைஞ்சே போச்சு ஸார்.''

டி.எஸ்.பி.பிரகாசம் உள்ளே நுழைய - ஸ்டேஷனுக்குள் இருந்த எல்லா கான்ஸ்டபிள்களும் விறைத்து சல்யூட் போட்டார்கள்.

''லாக்கப் கதவைத் தொறந்து விடய்யா...''

ஒரு கான்ஸ்டபிள் ஓடிப்போய் - லாக்கப் கதவை அடைகாத்திருந்த பூட்டைத் திறந்து விட்டார்.

பிரகாசம் உள்ளே போக - சிமெண்ட் திட்டில் உட்கார்ந்திருந்த வெங்கடேஷ் பயமாய் எழுந்தான். லத்தி அடியில் உடம்பு கன்றிப்போய் - வீக்கம் காட்டியது. மூக்கு துவாரங்களிலும், கடைவாய் ஓரத்திலும் செங்கல் நிறத்தில் உறைந்து போன ரத்தம் தெரிந்தது. அணிந்திருந்த சட்டியிலும், பேண்டிலும் மண் தீற்றல்கள்.

பிரகாசம் அவனுக்கு எதிரே - கடோத்கஜத்தனமாய் வந்து நின்றார். கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டார்.

''உம் பேரென்ன...?''

''வெ...வெ... வெங்கடேஷ் ஸார்...''

''உனக்கு இன்ஷியல் கிடையாதா? இன்ஷியலையும் சேர்த்து சொல்லுடா.''

''இன்ஷியல் 'எஸ்..' ஸார்...'

''அப்பா பேரென்ன...''

''சந்தானம்... ஸார்.''

''என்ன ஜாதி...?''

ஜாதியின் பெயரைச் சொன்னான் வெங்கடேஷ். பிரகாசம் கோணலாய் புன்னகைத்தார். ''ஓ... அந்த காஸ்ட்டைச் சேர்ந்தவனா நீ...? அப்படீன்னா உடம்புல திமிரும் கொழுப்பும்



இருக்கும்... சரி... எதுக்காக அந்தப் பெண்ணைக் கத்தியால குத்தினே?''

''நான் குத்தலை... ஸார்...''

''வக்கீல்கிட்டேயும், டாக்டர்கிட்டேயும் பொய் சொல்லக் கூடாதுன்னு சொல்லுவாங்க. அந்த லிஸ்ட்ல போலீஸையும் சேர்த்துக்க...! போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துட்டா பொய் பேசக் கூடாது... உன்னோட கூட்டாளி யாரு...''

''ஸ...ஸார்... எனக்கு கூட்டாளின்னு யாரும் கிடையாது ஸார். நானும் கோபிகாவும் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காகத்தான் - கோயமுத்தூரிலிருந்து திருநீர்மலைக்கு வந்தோம்... வந்த இடத்துல...?''

பிரகாசம் கையமர்த்திவிட்டு கோணலாய் புன்னகைத்தார். ''ஏண்டா! அந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு உனக்கு - கோயமுத்தூர்ல கோயிலே இல்லையா? இங்கே வந்துதான் கல்யாணம் பண்ணிக்கணுமா?'

''உள்ளூர்ல கல்யாணம் நடந்தா விவகாரம் வரும்ன்னு நினைச்சித்தான் இங்கே வந்தோம் ஸார்...''

''கோபிகாதானே அந்தப் பொண்ணோட பேரு...?''

''ஆமா... ஸார்.'

''அவ எத்தனை பவுன் நகை போட்டுகிட்டு வந்தா...''

''எனக்கு தெரியாது ஸார்...''

பிரகாசம் பின்பக்கம் திரும்பிப் பார்க்காமல் ''கான்ஸ்டபிள்'' - என்று குரல் கொடுத்தார்.

''ஸார்...''

''கிவ் மீ ஏ லட்டி...''

கான்ஸ்டபிள் - வேகமாய் பக்கத்து அறைக்கு ஓடிப்போய் - லத்தி ஒன்றை கொண்டு வந்து

கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டே பிரகாசம் அதன் மினுமினுப்பான உடம்பை இடது கையால் உருவினார்.

''இப்ப சொல்லு...? அந்தப் பொண்ணு எவ்வளவு பவுன் நகைகளை போட்டுக் கிட்டிருந்தா...''

''தெரியாது ஸார்...''

''ச்ச்சத்த்த்''

வெங்கடேஷின் தோள்பட்டை மேல் லத்தி இறங்கி - ஒரு மரண வலியை உற்பத்தி செய்து கொடுக்க - அவன் வீறிட்டு பின்னுக்கு சாய்ந்தான்.

''ஸ... ஸார் அடிக்காதீங்க ஸார்...''

''இந்த லத்திக்கு நான் வேலையை தரக் கூடாதுன்னா... நீ பேசறது பூராவும் உண்மையா இருக்கணும். சொல்லு... உண்மையைச் சொல்லு.''

''நான் சொன்னதெல்லாம் உண்மைதான் ஸார்.. நானும் கோபிகாவும் கல்யாணம் பண்ணிக்கத்தான் திருநீர் மலைக்கு வந்தோம்.''

''கோபிகாவுக்கு என்ன வயசு...?''

''பத்தொன்பது...?''

''பத்தொன்பதா...? பதினேழா...?''

''பத்தொன்பது ஸார்...'' வெங்கடேஷ் சொல்ல டி.எஸ்.பி.உறுமினார். அவளோட வயசு மாத்திரம் பதினெட்டு வயசுக்கு கீழே இருந்ததுன்னா.. இந்தக் கேஸ்ல நீ தப்பிக்கவே முடியாது... சரி... அந்த நகைகளையெல்லாம்... எங்கே பதுக்கி வெச்சிருக்கே...?''

''ஸார்...''

கோபத்தில் - வீறிட்டான் வெங்கடேஷ்.

''என்னடா கத்தறே...?''



''கோபிகாவோட நகைகளை திருடினதும் - அவளைக் கத்தியாலே குத்திட்டு தப்பிச்சுட்டு போனதும் ஒரு பண்டாரம். அந்த பண்டாரத்தை கண்டுபிடிக்காமே. என்கிட்ட வந்து விசாரணை பண்றது முட்டாள்தனம்.''

''என்னடா சொன்னே...? முட்டாள்தனமா?''

''ஆமா... ஸார் முட்டாள்தனம்தான்! என்னோட கைவிரல் நகம் கோபிகா மேல அழுத்தமா பட்டுட்டா கூட அதுக்காக துடிச்சு போற ரகம் நான். நான் எதுக்காக கோபிகாவை கத்தியால குத்தணும்? ஒரு பண்டாரம் வந்து...''

லத்தி வீறியது.

''பண்டாரம் கதையை இன்னொரு வாட்டி சொன்னே - உன் உடம்புத் தோலை உரிச்சுடுவேன். ஏண்டா உன்னை மாதிரியான ரௌடி பசங்க டிப்டாப்பா ட்ரஸ் பண்ணிக்கிட்டு பணக்கார பொண்ணுங்களா பார்த்து காதலிக்க வேண்டியது. அவளை நம்ப வெச்சு - வெளியூர்களுக்கு கூட்டிட்டு போய் - அவ மூச்சை நிறுத்திட்டு - நகைகளை அடிச்சுட்டு கிளம்பிட வேண்டியது. இந்த சென்னையில எத்தனை கேஸை இதுமாதிரி பார்த்திருப்போம்.''

''ஸார்! நான் சொல்றதை நம்புங்க ஸார்...'' வெங்கடேஷ் நடுங்கும் கைகளால் கும்பிட்டுக் கொண்டே - டி.எஸ்.பிக்கு முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்தான்.

அதே விநாடி -

பின்பக்கம் குரல் கேட்டது.

''ஸார்...''

''பிரகாசம் திரும்பினார்.

இன்ஸ்பெக்டர் வரதராஜ் நின்றிருந்தார்.

''என்ன...?''

''ஜி.ஹெச்சிலிருந்து போன்... டாக்டர் நீலமேகம் பேசினார். அந்தப் பெண் கோபிகாவுக்கு

கான்ஷியஸ் திரும்பியிருக்காம். வாக்குமூலம் வாங்க உடனே புறப்பட்டு வரச் சொன்னார்.''

# 17



அன்வர்ஷாவின் வீடு.

சிவாவைச் சுற்றிலும் - கைகளில் பீர் நிரம்பிய டம்ளர்களோடு அன்வர்ஷாவும் - அவனுடைய சகாக்களும் உட்கார்ந்திருந்தார்கள். சிவா சொல்லிக் கொண்டிருந்தான்.

''இதோ பார் அன்வர்! அந்த வெங்கடேஷ் இந்த கேஸிலிருந்து தப்பிச்சு வெளியே வரவே கூடாது. அவன் சொல்ற 'பண்டாரக் கதை' உண்மையா இருந்தாலும் சரி பொய்யா இருந்தாலும் சரி... போலீஸுக்கு அவன் மேல இருக்கிற சந்தேகம் தெரியவே கூடாது.''

சகாக்களில் ஒருவனான செல்வம் குறுக்கிட்டான். ''தெரியாது ஸார். ஏன்னா கோபிகாவை அவன் கத்தியாலே குத்தினதை கண்ணால பார்த்ததா நாங்க நாலுபேரும் போலீஸ்ல சொல்லியிருக்கோம். நாளைக்கு கேஸ் கோர்ட்டுக்கு வந்ததும் - கூண்டிலேறி சாட்சி சொல்லப் போறதும் நாங்கதான்...''

''அந்த கோபிகா செத்திருந்தா கேஸ் இன்னமும் 'ஹாட்டா' இருந்திருக்கும். அவ தப்பிச்சுட்டாளே...?''

அன்வர்ஷா புன்னகைத்தான். ''கவலையே வேண்டாம் சிவா. கோபிகா பிழைக்கமாட்டாங்கிறது தான் டாக்டர்ஸோட ரிப்போர்ட்.''

''ஒருவேளை அவ பிழைச்சுட்டா...''

''என்ன பண்ணலாம்... நீயே சொல்லு சிவா...''

''அவ பிழைச்சுட்டா... போலீஸ்ல நடந்த சம்பவத்தை வாக்குமூலமா குடுப்பா. என்னைப் பொறுத்தவரைக்கும் - வெங்கடேஷ் சொல்ற 'பண்டார விவகாரம்' உண்மைதான். கோபிகாவை அவன் கத்தியால குத்தியிருக்க முடியாது. நகைகள் திருட்டு போனதுக்கும் அவன் காரணமா இருக்க முடியாது. ஏன்னா.. ஹி ஈஸ்... ஏ ட்ரூ லவர்.''

அன்வர்ஷா குறுக்கிட்டான். ''கோபிகா கண் விழிச்சு... உண்மையா... நடந்ததை போலீஸ்ல சொன்னா... வெங்கடேஷை வெளியே விட்டுடுவாங்க. அப்படி வெங்கடேஷ் வெளியே வர்ற நிமிஷம் அவனை பொணமாக்கிடலாமா?''

''நானும் அதைத்தான் மனசுல வெச்சுட்டிருக்கேன்... ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் செத்தாத்தான் - அவமானத்தாலே - குமுறிட்டிருக்கிற எம் மனசுக்கு ஆறுதலா இருக்கும்.''

அறையின் மூலையில் இருந்த டெலிபோன் கூப்பிட்டது. அன்வர்ஷா கையிலிருந்த பீர் டம்ளரை கீழே வைத்துவிட்டு - எழுந்து போய் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''அன்வர்! நான் பரமு பேசறேன்...''

''என்ன பரமு...''

''அந்தப் பொண்ணுக்கு கான்ஷியஸ் திரும்பிடுச்சு. டி.எஸ்.பி.பிரகாசம் ஹாஸ்பிடலுக்குள்ளே இப்பத்தான் போறார்...''

''நீ இப்ப எங்கிருந்து பேசறே?''

''ஹாஸ்பிடலுக்கு எதிர்ல இருக்கிற பூத்திலிருந்து...''

''சரி... அங்கே இருந்து நிலைமையைக் கவனி''

# 18



டி.எஸ்.பி.பிரகாசத்தையும், இன்ஸ்பெக்டர் வரதராஜையும் டாக்டர் நீலமேகம் எதிர்கொண்டார். ''ப்ளீஸ் சீக்கிரம் வாங்க...! அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடிவரை நல்ல 'கான்ஷியஸ்ல' இருந்தா...! இப்போ கான்ஷியஸ் கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சுட்டே வருது...''

''பேசறாளா டாக்டர்?''

''ஷி ஈஸ் ட்ரையிங்...! 'வெங்கடேஷ்... வெங்கடேஷ்ன்னு ரெண்டு தடவை கூப்பிட்டா...''

அறைக்குள் நுழைந்தார்கள். பாதி விழிகள் சொருகி - கண்மூடிப் படுத்திருந்த கோபிகா சன்னமான குரலில் - முனகிக் கொண்டிருந்தாள். பிரகாசம் அவளுடைய தலைமாட்டிலும் - வரதராஜ் பக்கவாட்டிலும் நெருங்கி நின்றார்கள்.

வரதராஜ் குனிந்தார்.

''மிஸ் கோபிகா...''

கோபிகாவின் விழிகள் 'திடும்'மென்று திறந்தன. இன்ஸ்பெக்டரின் முகத்தில் அப்படியே நிலைத்தன.

''கோபிகா... நாங்க... போலீஸ்...! உங்களை கத்தியால குத்தினது யார்ன்னு தெரியுமா...?''

கோபிகாவின் உதடுகள் பேச முற்பட்டு வேகமாய் அசைந்தன. நாக்கு உள்ளுக்குள் சுழன்றது.

''சொல்லுங்க...! உங்களை யார் கத்தியாலே குத்தினது?''

''பேச முடியலைன்னா... எழுதி காட்றீங்களா?''



கோபிகாவின் கையில் பால்பாயிண்ட் பேனாவை கொடுத்தார் இன்ஸ்பெக்டர். அது பிடிப்பில்லாமல் நழுவியது.

டாக்டர் குறுக்கிட்டு சொன்னார்.

''பத்து நிமிஷங்களுக்கு முன்னாடி இருந்த கான்ஷியஸ் இப்ப 'இல்லைன்னு' நினைக்கிறேன்...''

தலைமாட்டில் நின்றிருந்த டி.எஸ்.பி. பக்கவாட்டுக்கு வந்தார். கோபிகாவின் காதருகே குனிந்தார்.

''உன்னோட நகைகளை பறிச்சுகிட்டு கத்தியால குத்தினது வெங்கடேஷ்தானே?''

கோபிகாவின் கண்ணிமைகள் வேகமாய் துடித்தன. மார்பு ஒருமுறை சட்டென்று தூக்கிப் போட்டது.

''சொல்லும்மா... உன்னைக் கத்தியால குத்தினது வெங்கடேஷ்தானே?''

''ம்...ம்...ம்...ம்...''

''சொல்லு... வெங்கடேஷ்தானே?''

''வெ...வெ....வெங்க... டேஷு...!'' கஷ்டப்பட்டு பெயரை உச்சரித்த கோபிகா... சோர்ந்து போய் கண்களை மூடிக் கொண்டாள்.

டி.எஸ்.பி.சந்தோஷப்பட்டார். ''அந்த ராஸ்கல்தான்ய்யா இவளைக்-குத்தியிருக்கான்... பேரைச் சொன்னா பார்த்தியா...?''

''மறுபடியும் கேட்டுப் பார்க்கலாமா ஸார்...?''

டாக்டர் சொன்னார். ''வேண்டாம். அந்த பொண்ணுக்கு அது ரொம்பவும் ஸ்ட்ரெயினா இருக்கும். இன்னும் ஒரு மூணு மணி கழிச்சு... கான்ஷியஸ் வரும்போது ட்ரை பண்ணிடலாம்.''

இருவரும் வெளியே வந்தார்கள். வராந்தாவில் நடக்கும்போது டி.எஸ்.பி.சொன்னார் ''அவ 'வெங்கடேஷ்'ன்னு சொன்னதையே

வாக்குமூலமா எடுத்துக்க வேண்டியதுதான். பேப்பர்காரன்களுக்கெல்லாம் நியூஸை குடுத்துடு...''

''ஸார்...''

''என்ன...?''

''அந்தப் பொண்ணோட வாக்குமூலத்தை இன்னும் கொஞ்சம் விளக்கமா கேட்டுட்டு அப்புறமா... நியூஸ் குடுத்துடலாமே ஸார்...?''

''என்னய்யா... விபரம் புரியாத ஆளா இருக்கே...? நான் அந்த பொண்ணுகிட்டே உன்னைக் கத்தியால குத்தினது வெங்கடேஷ் தானேன்னு கேட்டப்ப... அவ வெங்கடேஷ்ன்னு முனகினாளே.. கவனிச்சியா..?''

''கவனிச்சேன் ஸார்.''

''அப்புறமென்னய்யா...?''

''அது வெறும் முனகல்தான் ஸார்.''

''அடிவயித்துல கத்திக்குத்தை வாங்கிட்டு அவ மேடையேறி பேசற மாதிரியா வாக்குமூலம் குடுப்பா. நான் 'வெங்கடேஷா?ன்னு கேட்டதும் அவ அதை ஆமோதிக்கிற மாதிரி வெங்க டேஷ்ன்னு சொன்னா! அது போதாதா நமக்கு...!''

''சரி... ஸார்... பேப்பர்க்கு நியூஸை குடுத்துடறேன்...''

வராந்தாவின் நீளத்தை முடித்துக் கொண்டு - ஹாஸ்பிடல் வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி போய்க் கொண்டிருந்த இருவரும் - பின்னால் யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டு நின்றார்கள். திரும்பிப் பார்க்க -

அந்த நர்ஸ். பதட்டமாய் - வியர்வையாய்... வந்து கொண்டிருந்தாள்.

''ஸார்...!''

''என்ன சிஸ்டர்...?''



''கோபிகா இறந்துட்டாங்க... டாக்டர் உங்களைக் கூப்பிட்டார்.''

''அட!'' டி.எஸ்.பி.ஆச்சர்யம் கலந்த சந்தோஷத்தோடு நர்ஸைப் பின் தொடர்ந்தார். இன்ஸ்பெக்டர் மட்டும் அதிர்ச்சியாய் நர்ஸிடம் கேட்டார்.

''எ...எப்படி?''

''நீங்க ரூமை விட்டு வெளியே வந்ததுமே - கோபிகாவுக்கு பல்ஸ் விழுந்துடுச்சு. டாக்டர் ஒரு இன்செக்ஷனைப் போட முயற்சி பண்ணிட் டிருக்கும்போதே ஃபிட்ஸ் வந்துடுச்சு... எல்லாமே சில செக்கண்ட்ஸ்தான்... என்ன ஏதுன்னு நிதானிக்கிறதுக்குள்ளே உயிர் பிரிஞ்சுடுச்சு...''

அறையை நெருங்கினார்கள். வாசலில் டாக்டர் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி - கையில் வைத்துக் கொண்டு - கவலையாய் நின்றிருந்தார். சொன்னார்.

''அன் எக்ஸ்பெக்டட்... அண்ட் அன் பார்ச்சுனேட்... ஹேப்பனிங்...''

பிரகாசம் சலனமில்லாத முகத்தோடு சொன்னார். ''நான் எதிர் பார்த்ததுதான்... கத்திக்குத்து விழுந்த இடம் ரொம்பவும் மோசமான இடம்...''

வெள்ளை விரிப்பை போர்த்திக்கொண்டு - ஸ்ட்ரெச்சரில் நீளமாய் படுத்துக்கொண்டு வெளிப்பட்டாள் கோபிகா.

''பார்க்கறீங்களா?''

முக பாகத்தில் இருந்த விரிப்பை விலக்கினார் டாக்டர்.

பாதிவிழி சொருகலோடு -

வாய் பிளப்போடு -

உயிரை விட்டிருந்தாள் கோபிகா.

''மூடிடுங்க டாக்டர்...''

விரிப்பு மூடப்பட்டு - கோபிகா நகாநது மார்ச்சுவரிக்குபோக -

டாக்டர் கேட்டார்.

''பெண்ணோட பேரண்ட்ஸுக்கு தகவல் அனுப்பிட்டீங்களா?''

இன்ஸ்பெக்டர் சொன்னார். ''போன் பண்ணியே விபரத்தைச் சொல்லிட்டோம். இந்நேரம் வந்திட்டிருப்பாங்க.''

''இந்தப் பொண்ணை காப்பாத்திட லாம்ன்னு நினைச்சேன்.''

''போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் உடனடியாக வேணும் டாக்டர்...'' ஒரு சிகரெட்டை பற்ற வைத்து - புகைவிட்டபடியே சொன்னார் டி.எஸ்.பி.

## 19



கோபிகாவின் காரியங்களை சென்னை யிலேயே முடித்துவிட்டு - உலர்ந்துபோன கட்டைகளாக ஊருக்குத் திரும்ப ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த குருமூர்த்தியையும் பங்கஜத் தையும் தன் அலுவலக அறைக்கு கூட்டிக் கொண்டு வந்தார் டி.எஸ்.பி.பிரகாசம் சொன்னார்.

''நடந்த சம்பவம் ஒரு மோசமான சம்பவம். எந்த ஒரு தாய் தகப்பனுக்கும் -"அந்த மாதிரியான ஒரு நிலைமை வரக்கூடாது. ஆனா உங்களுக்கு வந்திருக்கு. இதுமாதிரியான நிலைமை மத்த பேரண்ட்ஸ்களுக்கு ஏற்படக் கூடாதுன்னு நீங்க நினைச்சா... எனக்கு உதவி பண்ணணும்...''

குருமூர்த்தி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''நாங்க என்ன பண்ணணும்?''

''உங்க மகளைக் கொலை பண்ணின அந்த வெங்கடேஷ் தூக்குல தொங்கணும்ன்னு நீங்க ஆசை படறீங்களா இல்லையா?''



''ஆமா...''

''அந்த எண்ணம் உங்களுக்கு இருந்தா போதும். கோபிகாவுக்கு இப்போ என்ன வயசு?''

''பதினெட்டு முடிஞ்சு பத்தொன்பது.''

''உண்மையான வயசுதானா?''

''ஆமா...''

''இந்த வயசை மாத்தணும்''

''வயசை மாத்தணுமா?''

''ஆமா... கோபிகா மேஜர் கிடையாது. மைனர்தான்ங்கிற பாய்ண்ட் -கேஸுக்கு ஸ்ட்ராங்கா இருக்கும். எந்த ஜட்ஜ் கேஸை விசாரிச்சாலும்... வெங்கடேஷுக்கு தூக்குத் தண்டனை தான் கிடைக்கும்.''

குருமூர்த்தி யோசித்தார்.

''வயசை எப்படி மாத்த முடியும்?''

''தாராளமா மாத்தலாம்... உங்க ஊர் முனிசிபாலிடிக்கு போய் - பார்க்க வேண்டிய வங்களைப் பார்த்து கொடுக்க வேண்டியதை குடுத்துட்டா - கோபிகாவோட வயசை ரெண்டு வருஷம் குறைச்சு... ஒரு சான்றிதழ் வாங்கி கோர்ட்ல சப்மீட் பண்ணிட்டா போதும். கோபிகாவோட பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ணின டாக்டர் நமக்கு சாதகமாத்தான் மெடிக்கல் ரிப்போர்ட் குடுத்திருக்கார்.''

பங்கஜம் சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மினாள்.

''இனிமே யாரை என்ன பண்ணி என்னங் கய்யா பிரயோஜனம்? எம்பொண்ணு போயிட் டாள்? அவனை துண்டு துண்டா வெட்டி போட்டாலும், எம் பொண்ணு போனவ போனவதானே?''

''இதோ பாருங்கம்மா... உங்க துக்கம் எனக்கு புரியுது. உங்க பொண்ணை பாழ் பண்ணின

வனை சட்டம் தண்டிக்க வேண்டாமா? சட்டத்துல நிறைய ஓட்டைகள் இருக்கு... ஒரு நல்ல வக்கீலை வெச்சு.... அந்த வெங்கடேஷ் வாதாடினா... கொலைக் குற்றம் நிரூபிக்கப் படாமே... விடுதலையானாலும் ஆயிடுவான். அவன் விடுதலையாகக் கூடாது. சட்டத்துல உச்சபட்ச தண்டனையான தூக்குத்தண்டனையை - வாங்கிக் கொடுக்கத்தான் நான் முயற்சி பண்ணிட்டிருக்கேன். பொண்ணு மைனர்ன்னு கோர்ட்ல நிரூபணம் ஆயிட்டா போதும். அதுக்கான சான்றிதழை உங்க ஊர் முனிசிபாலிடியில் வாங்கிக் கொடுத்தாபோதும்... மத்ததை நான் பார்த்துக்கிறேன்..."

குருமூர்த்தி மௌனமாய் தலையாட்டினார்.

## 20



சிறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு - சுவரின் மூலையில் குத்துக்காலிட்டு உட்கார்ந் திருந்த வெங்கடேஷ் தலை நிமிர்ந்தான். கையில் கனமாய் லத்தி வைத்திருந்த வார்டன் அதட்டலாய் சொன்னான்.

"வெளியே எந்திரிச்சு வா..."

கண்களுக்கு கீழே கருவளையங்கள் பிறந்துவிட்ட முகத்தோடு தொய்வாய் நடந்து வந்தான் வெங்கடேஷ்.

"சீக்கிரமா வா... உன்னைப் பார்க்கிறதுக்காக உன்னோட ஃப்ரெண்ட் பிரதீப்ன்னு யாரோ வந்து - விஸிட்டார்ஸ் செல்லில் காத்திட்டிருக்காங்க. பத்து நிமிஷத்துக்குள்ளே பேசிட்டு திரும்பிட ணும்."

வெங்கடேஷ் முகத்தில் எந்த சலனத்தையும் காட்டாமல் கடப்பைக்கல் வராண்டாவில் நடந்து விசிட்டர்ஸ் செல்லுக்கு வர கம்பி வலைக்கு பின்னே கண்ணீரோடு பிரதீப் தெரிந்தான்.



"பி...ர...தீப்..."

"வெ....வெங்கடேஷ்...! என்னடா ...தெல்லாம்...? பேப்பர் நியூஸை படிச்சுட்டு... ...ன்னால நம்ப முடியாமே ஓடி வந்திருக்கேன்."

வெங்கடேஷ் கசப்பாய் புன்னகைத்தான்.

"எல்லாம்.... என் நேரம்..."

"வெங்கடேஷ்! நீ கோபிகாவை எவ்வளவு ...மா நேசிச்சேன்னு எனக்குத்தான தெரியும்...! ...வளை நகைகளுக்காக நீதான் கொலை ...ண்ணினேன்னு பேப்பர்காரன் கூசாமே நியூஸை ...போட்டிருக்கானே..."

"போலீஸ் சொன்னதை அவங்க ...போட்டிருக்காங்க."

"கோபிகா மைனர் பொண்ணாமே?"

"இதுவும் ஒரு போலீஸ் பொய்..."

"நீ வக்கீலை வெச்சுக்க விரும்பலைன்னு ...சொல்லிட்டியாமே?"

"இது ஒண்ணுதான் உண்மை."

"ஏன் வக்கீலை வேண்டாம்ன்னுட்டே?"

"நான் தூக்குல தொங்க விரும்பறேன்."

"செய்யாத குற்றத்துக்கு நீ ஏண்டா தூக்குல ...தொங்கணும்? ஒரு நல்ல லாயரை வெச்சு... ...ஸை உடைச்சு."

"வேண்டாம்...! என் கோபிகாவே போயிட்ட ...க்கு நான் இந்த உலகத்துல வாழ விரும்பலை... ...கோர்ட்ல கொலைக் குற்றத்தை ஒத்துக்கிட்டு ...சீக்கிரமா தீர்ப்பை வாங்கிட்டு சாகப்போறேன்."

"வெங்கடேஷ்! உனக்கென்ன பைத்தியமா ...பிடிச்சிருக்கு?"

"பிரதீப்! உனக்கொரு விஷயம் தெரியுமா? ...விஷயத்தைக் கேள்விப்பட்டு எனக்கு உதவி ...செய்யவோ - என்னை ஜாமீன்ல எடுக்கவோ...

ஊரிலிருந்து என்னோட அப்பாவோ... அம்மாவோ வரலை.''

''ஏன்...?''

''என்னை கொலைகாரன்னு அவங்க முடிவு கட்டிட்டாங்களாம். எனக்கு எள்ளும் தண்ணியும் இறைச்சுட்டாங்களாம்.''

''இதையெல்லாம் உனக்கு யார் வந்து சொன்னாங்க?''

''எங்க வீட்டு சமையல்காரன்.''

''பேப்பர் நியூஸை படிச்சுட்டு இப்படியு நம்புவாங்களா? இதோ பார் வெங்கடேஷ்! யாரோ என்னமோ சொல்லிட்டு போறாங்க. உனக்கு உதவி பண்ண நானிருக்கேன். எவ்வளவு பண செலவானாலும் பரவாயில்லை. ஒரு நல் வக்கீலை... வெச்சு....''

''பிரதீப்! இதெல்லாம் வீண் வியர்த்தமா வேலை. எனக்கு வக்கீல் வேண்டாம்னு சொல்லிட்டேன். கோபிகாவை நான்தா கொலை பண்ணினதாகவும் - நகைகளை யெல்லாம் - பாலுங்கிற ஃப்ரண்ட் கிட்டே குடுத் அனுப்பிச்சிட்டதாகவும் போலீஸ்ல வாக்குமூல குடுத்துட்டேன்... பாலு என்னோட கற்பனை ஃப்ரெண்ட்... போலீஸ் அவனை தேடிட்டிரு காங்க.''

''வெ....வெங்கடேஷ்.''

''பிரதீப்! எனக்காக நீ ஒரேயொரு காரிய பண்ணனும்.''

''என்ன பண்ணனும் சொல்லு.''

''ஊருக்குப் போனதும் என்னோட அப் அம்மாவை நீ பார்க்கணும்.''

''பார்த்து...?''

''ஒரு கேள்வி கேட்கணும்.''

''என்ன கேக்கணும்?''

''உங்களுக்கு பிறந்த மகன் ஒரு கொலைகாரனா இருப்பானான்னு கேக்கணும்.''

''வெங்கடேஷ்...!''

''அப்புறம்... என்னோட ஆசை ஒண்ணு...''

''சொல்லு...''

''ஒருவேளை எனக்கு தூக்குத்தண்டனை கிடைச்சுட்டா... என்னைத் தூக்குல போடறதுக்கு ஒரு நாள் முந்தி - உன்னை மட்டுமே பார்க்க நான் ஆசைப்படறேன்... எனக்காக ஒரு பத்து நிமிஷம் ஒதுக்கி பேசிட்டு போவியா பிரதீப்? ஏன்னா நீ இருந்தப்பதான் நானும் கோபிகாவும் கல்யாணம் பண்ணிகிட்டு - உலகத்திலேயே சந்தோஷமா இருக்கணும்னு ஆசைப்பட்டவன்.''

''வெங்கடேஷ்! நான் சொல்றதைக் கேளு... ஒரு நல்ல வக்கீலை வெச்சு... கேஸை டீல் பண்ணினா... கேஸ் நிக்காது... கோபிகா மைனர் பண்ணவில்லை... மேஜர்ன்னு என்னால நிரூபிக்க முடியும். அவ கடத்தப்படலை.. அவ இஷ்டப்பட்டுத்தான் உன்கூட வந்தாங்கிறதுக்கு - மதுரை ஏர்ஃபோர்ட்டுக்கு போற வழியில நம்ம கார்ல ஏறின டி.எஸ்.பியை சாட்சியம் கொடுக்க வைக்கலாம்... இன்னும்....''

''பிரதீப்! யார்க்கும் எந்த சிரமமும் வேண்டாம். நான் விடுதலையாகி வெளியே வந்தாலும் - செத்துப்போன என் மனசோடு நான் வாழ முடியாது.''

வார்டன் வந்து குரல் கொடுத்தார்.

''டைம் முடிஞ்சுது...''

வெங்கடேஷ் பின் வாங்கினான். ''பிரதீப்! மறந்துடாதே...! என்னைத் தூக்குல போடறதுக்கு முதல்நாள் - உன்னை மட்டுமே நான் பார்க்க விரும்பறேன். தயவு பண்ணி வா! வருவியா?''

''கண்டிப்பா வர்றேன் வெங்கடேஷ்.''

''கோபிகாவோட ஃப்ரெண்ட் சித்ராவுக்கு என்னோட சார்பா ஒரு நன்றியைச் சொல்லிடு. அது கோபிகாவுக்கு எவ்வளவோ உதவி பண்ணியிருக்கா.''

பிரதீப் கண்ணீரோடு தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே வெங்கடேஷ் திரும்பி - தொய்வாய் நடந்தான்.

## 21



கேஸ் கோர்ட்டுக்கு வந்து - சில மாதங்களிலேயே விசாரணை முடிந்து போயிருக்க, அன்றைக்கு தீர்ப்பு தினம். கோதுமை மாவில் செய்த முகம் மாதிரி - முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல், பரீட்சைக்குப் படிக்கும் மாணவனைப் போல் - தீர்ப்பின் வாக்கியங்களை வாசித்துக் கொண்டிருந்தார் ஜட்ஜ்.

''ஆகவே... குற்றவாளியே இந்த குற்றத்தை மனப்பூர்வமாய் ஒப்புக் கொள்வதாலும், கொலைச் சம்பவத்தை நேரில் பார்த்த செல்வம், பரமு, அற்புதம், தங்கவேலு ஆகியோரின் சாட்சியங்கள் - குற்றத்தை உறுதிபடுத்துவதாலும், வெங்கடேஷ் என்கிற வெங்கடேஷ்வரன் தான் - கோபிகாவை நகைகளுக்காக - குத்தி கொலை செய்திருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு இந்த கோர்ட் வருகிறது. அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர் கொடுத்த மருத்துவ அறிக்கையின்படியும் கோவை மாநகராட்சி கொடுத்த - பிறப்பு சான்றிதழ்படியும் கோபிகாவுக்கு வயது பதினேழுதான் என்று நிருபணமாகிறது. எனவே மைனர் பெண்ணை கடத்தி வந்து - திருநீர் மலையில் வைத்து நகைகளுக்காக குத்திக் கொன்ற வெங்கடேஷ் என்கிற வெங்கடேஷ்வரனுக்கு இந்த கோர்ட் 302-வது செக்ஷன்படி - குற்றவாளிக்கு மரணதண்டனை விதித்து - தூக்கிலிட உத்தரவிடுகிறது. சாகும்வரை வழக்கிற்கு தேவையான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் பலம் பொருந்திய வகையில் உருவாக்கிக் கொடுத்த போலீஸாரையும் - குறிப்பாக டி.எஸ்.பி.பிரகாசத்தையும் இந்த கோர்ட் பாராட்டுகிற அதே நேரத்தில் - வெங்கடேஷின் கூட்டாளியான பாலு என்கிற நபர் கொண்டு போன - கோபிகாவின் நகைகளையும் போலீஸார் மீட்க தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த கோர்ட் உத்தரவிடுகிறது.''

பார்வையாளர் வரிசையில் உட்கார்ந்திருந்த சிவாவும், அன்வர்ஷாவும் புன்னகையோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''அன்வர்! என்னோட மனசு இன்னிக்குத் தான் குளிர்ந்திருக்கு. உன்னோட ஆட்கள் கொடுத்த சாட்சியம்தான் - வெங்கடேஷுக்கு தூக்கு தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கு. ஊருக்கு போய் பணம் அனுப்பறேன். எல்லார்க்கும் குடுத்துடு...''

''இந்த வெற்றியை கொண்டாட வேண்டாமா சிவா?''

''கொண்டாடிடலாம்... ஏதாவது ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு போயிருவோம்.''

தீர்ப்பைக் கேட்டுவிட்டு - ஒரு புன்னகையோடு - கூண்டைவிட்டு கீழே இறங்கினான் வெங்கடேஷ்.

போட்டோகிராபர்கள் அவனை காமிராவில் அடைப்பதற்காக பக்கவாட்டிலும், முன்னிலும் ஓடிவர - பத்திரிகை நிருபர் ஒருவர் போலீஸுக்கு நடுவில் இருந்த அவனை நெருங்கிக் கேட்டார்.

''இந்த தீர்ப்பைப் பத்தி என்ன நினைக்கிறே?''

''என்னோட கோபிகாகிட்டே போகிறது ஒரு மார்க்கம்.''

''ஹைகோர்ட்டுக்கு அப்பீல் பண்ணுவியா?''

''மாட்டேன்.''

''ஜனாதிபதிக்கு மெர்ஸி பெட்டிஷன் போடுவியா?''

''நான் யாரோட கருணையையும் எதிர் பார்க்கலை. நாளைக்கே என்னைத் தூக்குல போட்டாலும் சந்தோஷம்...''

வெங்கடேஷை கோர்ட்டுக்கு வெளியே கொண்டு வந்து ஜீப்பில் ஏற்றினார்கள்.

# 22



கிரிமினல் லாயர் ரத்னவேல் தீர்க்கமாய் சொன்னார்.

''ஸாரி மிஸ்டர் பிரதீப்...! இந்த கேஸை அப்பீலில் ஹைகோர்ட்டுக்கு கொண்டு போனாலும் பிரயோஜனமில்லை.''

பிரதீப் அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டான். ''அப்படி சொல்லிடாதீங்க லாயர் ஸார். வெங்கடேஷ் கோபிகாவோட மரணத்தாலே பாதிக்கப்பட்டு - அந்தக் கொலையை நான்தான் பண்ணினேன்னு வாக்குமூலம் குடுத்திருக்கான். எனக்குத் தெரியும் அவன் இந்தக் கொலையை பண்ணியிருக்க மாட்டான்.''

''இதோ பாருங்க பிரதீப்! இந்த கேஸ் தாம்புக்கயிறு மாதிரி நல்ல ஸ்ட்ராங். ஒருத்தன் தான் கொலை பண்ணலைன்னு சொன்னாலோ... பண்ணினேன்னு சொன்னாலோ ஜட்ஜ் அதை வேதவாக்கியமா எடுத்துக்கிறதில்லை. சாட்சி களை விசாரிச்சு காரண காரியங்கள் சரியாக இருந்தால்தான் - அவர் தீர்ப்பையே சொல்றார். இந்த கேஸ்ல போலீஸாருக்கு ரெண்டு சாதகமான பாயிண்ட்ஸ். ஒண்ணு பொண்ணு மைனராக இருந்தது. ரெண்டு 'ஐவிட்னஸ்.' அந்த நாலு பேரும் சம்பவத்தை நேரல பார்த்த மாதிரியே சொன்ன சாட்சியம் கேஸுக்கு பலம். உங்க ஆசைப்படி இந்த கேஸை அப்பீல்ல ஹைகோர்ட்டுக்கு கொண்டு போனாலும் - கீழ்க் கோர்ட்டில் விசாரணை பண்ணின சாட்சிய அடிப்படையில்தான் அவங்க தீர்ப்பும் இருக்கும்.''

''வெங்கடேஷ் தூக்கு தண்டனையிலிருந்து தப்புவிக்க வேற மார்க்கமே இல்லையா லாயர் ஸார்?''

''ஜனாதிபதிக்கு மெர்ஸி பெட்டிஷன் அனுப்பலாம். அவர் பார்டன் பண்ணினா தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையா மாறலாம்... இதைத்தவிர இப்போதைக்கு வேற வழியே இல்லை...''

''லாயர் ஸார்! இந்த கேஸ்ல நிறைய தில்லுமுல்லு நடந்திருக்கு. கோபிகாவுக்கு உண்மையான வயசு பத்தொன்பது. அவ மேஜர். ஆனா போகஸ்பர்த் சர்ட்டிபிகேட்டை கோர்ட்ல ப்ரொட்யூஸ் பண்ணி - கோபிகாவை மைனரா காட்டியிருக்காங்க. அப்புறம் அந்த ஐவிட்னஸ் பேர்வழிகள் நாலுபேரும் - சிவாவுக்கு வேண்டிய ஆசாமிகள். டி.எஸ்.பி.பிரகாசம் கோபிகாகிட்டே - ஹாஸ்பிடலில் வாக்குமூலம் வாங்கவே இல்லை....''

லாயர் புன்னகைத்தார்.

''இனிமே இதைப்பத்தி பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை... பிரதீப் சந்தர்ப்பம், சூழ்நிலை, சாட்சியம் எல்லாமே... வெங்கடேஷுக்கு பாதகம்... ஒரு கேஸ் நிக்காது தோத்துடும்ன்னு தெரிஞ்சா. நா.. அந்த கேஸை டீல் பண்ண மாட்டேன். எனக்கு கால விரயம் உங்களுக்கு பண விரயம்...''

''ஜனாதிபதிக்கு ஒரு மெர்ஸி பெட்டிஷன் போடவாவது நீங்க உதவி பண்ணுவீங்களா லாயர் ஸார்?''

''அதை வேணுமானா செய்யலாம்.''

## 23



''வெங்கடேஷ்!''

குரல்கேட்டு - படுத்திருந்த வெங்கடேஷ் எழுந்து உட்கார்ந்தான். செல்லுக்கு வெளியே - சூப்பிரெண்ட் நின்றிருந்தார். வார்டன் கதவைத் திறந்துவிட - உள்ளே நுழைந்தார்.

''இன்னிக்கு பூராவும் நீ ஒண்ணும் சாப்பிடலையாமே?''

''எனக்கு சாப்பிட பிடிக்கலை ஸார்.''

''ஏன்...?''

''பசிங்கிற உணர்ச்சியே மரத்துப் போச்சு...''

''இதோ பார்... ஜெயிலுக்குள்ளே வந்தா சாப்பிடாமே இருக்கிறது... குற்றம். உனக்கு உடம்பு சரியில்லைன்னா சொல்லு ஹாஸ்பிடலுக்கு அனுப்பி வெக்கிறேன்.''

''வேண்டாம் ஸார்.''

''வெங்கடேஷ்! உன்னை தூக்குல போடற தேதி இன்னும் முடிவாகலை. உன்னோட ஃப்ரெண்ட் உன் சார்பா ஜனாதிபதிக்கு கருணை மனு போட்டிருக்கான். அந்த கருணை மனு ஏற்கப்பட்டா... உனக்கு ஆயுள் தண்டனை. நிராகரிக்கப்பட்டால் உன்னை தூக்குல போடற தேதியை நிர்ணயம் பண்ணிடுவோம்... கருணை மனு பத்தின முடிவு தெரிகிற வரைக்கும் நீ ஜெயில்ல ஏதாவது வேலை பார்த்திட்டிருக்கலாம்... உனக்கு என்ன வேலை தெரியும்...?''

''நீங்க எதை கொடுத்தாலும் செய்யறேன் ஸார்...''

''என்னோட குவார்ட்டர்ஸுக்குப் பின்னாடி ஒரு தோட்டம் போட்டிருக்கேன். இனிமே அதை பராமரிக்கிறதுதான் உன்னோட வேலை...''

''சரி... ஸார்''

''வா... குவார்ட்டர்ஸுக்கு போகலா...''

சூப்பிரண்ட் அவனைக் கூட்டிக்கொண்டு சிறைச்சாலைக்கு கொஞ்சம் தள்ளியிருந்த குவாட்டர்ஸுக்கு கூட்டிப் போனார். நான்கைந்து அடர்த்தியான வேப்ப மரங்களுக்கு மத்தியில் அந்த குவாட்டர்ஸ் ஓட்டுக் கூரையோடு தெரிந்தது.

குவார்ட்டர்ஸ் வாசல் படிக்கட்டில் உட்கார்ந்து - வார இதழ் ஒன்றை படித்துக் கொண்டிருந்த - மேக்ஸி அணிந்த பெண்ணொருத்தி எழுந்து நின்றாள்.

''என்னப்பா... மத்தியான சாப்பாட்டுக்கே வரலை...?''

''வெளியே போயிட்டேன்மா.. போன இடத்திலேயே லஞ்சை முடிச்சுகிட்டேன்...! எனக்கு இப்போ காப்பி வேணும்...''

''கொண்டு வர்றேன்ப்பா...''

''ரெண்டு காப்பியா கொண்டு வந்துடும்மா...! வெங்கடேஷும் காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடலையாம்.''

''எனக்கு காப்பி வேண்டாம் ஸார்.''

''ஏம்பா...?''

''நான் காப்பி டீ எதுவும் குடிக்கிறதில்லை...''

''ஏன்...?''

''அஞ்சு வருஷத்துக்கு முன்னாடியே அந்த பழக்கத்தையெல்லாம் விட்டுட்டேன்...'' வெங்கடேஷ் சொல்ல - சூப்பிரண்ட் மகள் குறுக்கிட்டாள்.

''அந்த கெட்ட பழக்கத்தையெல்லாம் விட்டுட்டு... கொலை செய்யற நல்ல பழக்கத்தை மட்டும் வெச்சுகிட்ட போலிருக்கு....''

வெங்கடேஷ் மெல்ல சிரித்தான்.

''என்ன சிரிக்கிறே...?''

''உண்மை என்னோட கோபிகாவுக்கும், ஆண்டவனுக்கும் மட்டும்தான் தெரியும்..''

''ஒரு கொலையை பண்ணிட்டு தத்துவம் பேசறியா...?''

''இது தத்துவம் இல்லேம்மா. சட்டத்தோட தடுமாற்றம்...''

''ஆமா...! திட்டம் போட்டு கொலையை பண்ணிட வேண்டியது. அப்புறம் சட்டத்து மேல் போட்டுட வேண்டியது...'' சூப்பிரண்ட் பெண் முனகிக் கொண்டே உள்ளே போக - வெங்கடேஷ் மறுபடியும் சிரித்துக் கொண்டான்.

''நான் எங்கே ஸார் வேலை பார்க்கணும்?''

''வா... பின்பக்கம் போலாம்...''

சூப்பிரண்ட் கூட்டிக் கொண்டு போனார். குவார்ட்டர்ஸுக்கு பின்பக்கம் - வரிசையாய் தள்ளரக தென்னை மரங்கள். நடுநடுவே கீரைப்பாத்திகள், பூச்செடிகள், ரோஜா பதியன்கள்.

ஒரு தென்னை மரத்துக்கு அருகே குத்திக் காலிட்டு உட்கார்ந்து - மண்வெட்டியால் குத்திக் கிளறிக் கொண்டிருந்த ஒரு கைதியை சூப்பிரண்ட் கூப்பிட்டார்.

''மாதவா...''

அவன் திரும்பிப் பார்த்து - எழுந்து - ஓடிவர

வெங்கடேஷ் அவன் முகத்தைப் பார்த்து திடுக்கிட்டான்.

'இவனை எங்கோ பார்த்திருக்கிறோமே...?'

'எங்கே...?'



''அந்த உருண்டை விழிகள்... அமுங்கின மாதிரி மூக்கு...''

''அந்த உருண்டை விழிகள்... அமுங்கின மாதிரி மூக்கு...''

''அய்யா!'' - அவன் ஓடிவந்து சூப்பிரண்ட் முன்பாக பவ்யமாக நிற்க சூப்பிரண்ட் சொன்னார்.

''மாதவா... இனியொரு பத்து நாளைக்கு... உனக்கு வீவிங் செக்‌ஷன்ல வேலை... கார்டனிங் வேலையைப் பார்த்துக்க வேற ஆள் வந்திருக்கு.''

''சரிங்கய்யா...'' - என்றவன் வெங்கடேஷைப் பார்த்துவிட்டு சட்டென்று தலை குனிந்து கொண்டான். கண்களில் ஒருவித திருட்டுத்தனம் ஈஷியிருந்தது. அங்கிருந்து சீக்கிரம் நகர்ந்துவிட வேண்டும் என்கிற பதைபதைப்பு உடம்பில் அரும்ப - அவன் சூப்பிரண்ட்டை ஏறிட்டான்.

''நான் செல்லுக்கு போகட்டுமாய்யா...''

''ம்... வார்டன் தங்கராஜ் கண்டம் வார்டுல இருப்பார். அவரைப் போய் பார்த்துட்டு - உன்னோட செல்லுக்கு போ...''

அவன் தலையாட்டிவிட்டு வேகவேகமாய் நடக்க - வெங்கடேஷ் அவனையே வெறித்தபடி நின்றிருந்தான்.

''என்ன வெங்கடேஷ். மாதவனை அப்படிப் பார்க்கிறே...?''

''ஸார்! இவன்...?''

''உன்னோட ஊர்க்காரன்தான். பேரு மாதவன். படிச்சிருக்கான். வேலை கிடைக்காததினால்... வழிப்பறி... பிக்பாக்கெட்ன்னு தொழில் நடத்தினான். மூணு மாசத்துக்கு முன்னாடிதான்.. போலீஸ் கையில மாட்டினான். இரண்டு மாசமா கோயமுத்தூர் ஜெயில்ல இருந்துட்டு - இங்கே வந்திருக்கான்.''

சூப்பிரண்ட் பேசப் பேச -

வெங்கடேஷ் மாதவனுக்கு மானசீகமாய் - மொட்டையடித்து காவியை உடுத்திப் பார்த்தான்.

இதயத்தில் நெருப்பு பற்றிக் கொண்டது.

'அன்றைக்கு திருநீர்மலையில் பண்டாரமாய் வந்தவன் இந்த மாதவன்தான்...!' - வெங்கடேஷின் உடம்பிலிருந்த அத்தனை செல்களும் ஒரே நேரத்தில் அடித்து சத்தியம் செய்தன.

## 24



வெங்கடேஷ் - பிறகு வந்த இரண்டு ராத்திரிகளில் - கொஞ்சம்கூட கண்ணை அசைக்காமல் தீவிரமாய் யோசித்தான். பகல் நேரங்களில் - சூப்பிரண்ட் குவார்ட்டர்ஸ்-க்கு பின்புறம் இருந்த தோட்டத்தில் - கார்டனிங் வேலையை பார்த்துக் கொண்டே - மாதவனின் நடமாட்டத்தைக் கவனித்தான். காலையில் எட்டு மணிக்கு வீவிங் செக்ஷனில் நுழைகிற அவன் - பத்து மணியிலிருந்து பத்தரை மணிக்குள் ஏதாவது ஒரு ஐந்து நிமிஷம் - ஒதுக்குப்புறமாய் இருந்த கழிவறைக்குப் போனான். மதிய உணவை வாங்கிக்கொண்டு - யாரோடும் சேராமல் - தனியாய் உட்கார்ந்து சாப்பிட்டான். வார்டர்களிடம் அதிகப்படியாய் பவ்யம் காட்டினான். ரோல்கால் எடுக்கப்படும்போது - வெங்கடேஷின் பார்வையை தவிர்ப்பதற்காக - கடைசியில் போய் நின்றான்.

வெங்கடேஷுக்கு ஊர்ஜிதமாகிவிட்டது.

'பண்டாரமாய் வந்து - வாழ்க்கையை பாழ் டுத்திய ராஸ்கல் இவன்தான்!'

'இவனை என்ன பண்ணலாம்...?'

'இனிமேல் போலீஸில் எது சொன்னாலும் டுபடாது.'

'எல்லா கதவுகளும் வெளிப்பக்கமாய் தாழிடப்பட்டுவிட்ட நிலையில் எந்தக் கதவைத் தட்டினாலும் பிரயோஜனமில்லை...'

'இவனை தனியாய் சந்தித்து...?'

"வெங்கடேஷ்...!"

சூப்பிரண்டின் குரல் கேட்டு - கீரை பாத்திக்குப் பக்கத்தில் யோசனையாய் உட்கார்ந்திருந்த - வெங்கடேஷ் திடுக்கிட்டு எழுந்தான்.

"ஸார்..."

"என்ன யோசனை...?"

"ஒண்ணுமில்லை ஸார்..."

"சுதா காலேஜ்-க்கு போயாச்சு. நான் 'செல் விசிட்' போறேன். நீ கார்டனிங் ஒர்க்கை பார்த்திட்டிரு... இன்னிக்கு எல்லா தென்னங் கன்றுக்கும் உரம் போடணும்... ஜெயில் ஸ்போர்ட்ல சொல்லி - உரம் வாங்கிக்க..."

"சரி... ஸார்..."

அவன் நகர்ந்து போக -

வெங்கடேஷ் தூரத்தில் தெரிந்த ஜெயில் கிளாக் டவரைப் பார்த்தான்.

மணி பத்து ஐந்து -

உஷாரானான்.

'பத்து மணியிலிருந்து பத்தரை மணிக்குள் - மாதவன் எந்த நிமிஷமும் டாய்லெட் போக - வீவிங் செக்ஷனிலிருந்து வெளியே வருவான்.

'இன்றைக்கு மடக்கி கேட்டு விட வேண்டியதுதான்.'

யோசித்துக் கொண்டே -

ஒரு அடர்த்தியான - தென்னை மரக் கிளைக்குப் பின்னால் போய் உட்கார்ந்தான். கையிலிருந்த சிறிய சைஸ் கடப்பாறை -

மண்ணைக் கொத்துவதுபோல் பாவ்லா செய்து கொண்டிருக்க - காத்திருந்தான்.

10.10

10.15

10.20

10.25

சரியாய் பத்தரை மணிக்கு - மாதவன் வெளிப்பட்டான். நிதானமான நடையில் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு - ஒதுக்குப்புறமாய் இருந்த கழிவறையை நோக்கிப் போனான்.

வெங்கடேஷ் எழுந்தான்.

கையிலிருந்த சிறிய கடப்பாறையோடு - மரங்களுக்குப் பின்னால் பதுங்கி - பதுங்கி - பார்வையை அவ்வப்பொழுது சுழற்றி சுழற்றி பார்த்துக் கொண்டு - கழிவறையை கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கி -

மாதவன் உள்ளே நுழையும்முன் -

அவன் கழுத்தில் கையை வைத்து -

கழிவறைக்கு பின்பக்கமாய் தள்ளிக் கொண்டு போய் - சுவரின் மூலையில் நிறுத்தி வைத்துக் கொண்டான்.

''என் கோபிகாவைக் கொன்னவன் நீதானே...?''

மாதவனின் விழிகள் நிலைகுத்தின.

''கோ...கோபிகா.. யாரது...?''

''திருநீர்மலையில் குத்திக் கொன்னியே... அந்த கோபிகாவைச் சொல்றேன்.''

''அது... அது நானில்லை...''

''பொய் சொல்லாதே...! பண்டாரமா வேஷம் போட்டுட்டு வந்தது நீதானே...?''

''நா... நான்... இல்லை...''

''கையில என்ன இருக்குன்னு பார்த்தியா...? கடப்பாறை. நீ உண்மையை ஒத்துக்கலைன்னா... ஓங்கி சொருகிடுவேன்... உன்னைக் கொல்ற துனால எனக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஏன்னா... ஏற்கெனவே நான் செய்யாத குற்றத்துக்கு... தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவன். இனிமே நான் எத்தனை பேரை கொலை பண்ணினாலும் - என்னை ஒரேயொரு தடவைதான் தூக்குல போட முடியும்... ம்... சொல்லு... அந்த பண்டாரம் நீதானே...?''

மாதவன் வியர்த்து ஒழுகினான்.

''ம்... சொல்லு...''

''ஆ... ஆமா! எ... என்னைக் கொன்னுடாதே!''

''உண்மையைச் சொன்னா நான் உன்னை உயிரோடு விட்டுடுவேன். நான் திருநீர்மலைக்கு கோபிகாவோடு வர்றது உனக்கெப்படி தெரியும்...?''

''வந்து... வந்து...''

''சொல்லு...! நானும் கோபிகாவும் திருநீர் மலைக்கு வர்றது உனக்கு எப்படி தெரியும்...?''

''எ... என்னை என்னைக் கொன்னுட மாட்டியே...?''

''மாட்டேன்... சொல்லு...''

''கோபிகாவோட நகைகளைக் கொள்ளை யடிச்சுட்டு... அவளை நாசம் பண்ண சொன்னது...?''

''சொல்லு... யாரு...?''

மாதவன் உடல் நடுங்கி - குரல் குழறி கொண்டே மெல்லச் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல - வெங்கடேஷ் முகம் வெளிறிக் கொண்டு போயிற்று.

''நீ... நீ சொல்றது நி... நிஜமா...?''

''சத்தியம்...''

''அந்த நகைகளெல்லாம் இப்ப அவன் கிட்டதான் இருக்கா?''

''ஆமா...''

''அடப்பாவிகளா...? என்னோட வாழ்க்கை யையே நாசம் பண்ணிட்டீங்களேடா...'' வெங்கடேஷ் ஆத்திரமாய் கத்திக் கொண்டே - கையிலிருந்த கடப்பாறையால் - மாதவன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டான்.

மாதவன் அலறக்கூட நேரமில்லாமல் - சுவர்க்கு சாய்ந்து அப்படியே சரிந்தான்.

வெங்கடேஷ் பதட்டமாய் சுற்றும் முற்றும் பார்த்தான்.

தொலைவில் ஒரு கன்விக்ட் வார்டன் - மெதுவாய் நடந்து போய்க் கொண்டிருந்தார்.

கண்டம் வார்டில் கைதிகளின் நடமாட்டம் தெரிந்தது.

'இவனை என்ன பண்ணலாம்...?'

யோசித்துக் கொண்டே திரும்பியவனின் ார்வையில் -

அந்த செப்டிக் டாங்கின் 'மேன் ஹோல்' தெரிய - வேகமாய் அதை நெருங்கி - கையிலிருந்த கடப்பாறையால் அதன் மூடியை நம்பினான். அந்த கனமான இரும்பு வட்டம் மதுவாய் திறந்து கொண்டது.

வெங்கடேஷ் பரபரவென்று செயல் ட்டான். சுவர்க்கு சரிந்து கிடக்கும் மாதவனை - தாள்களைப் பற்றி தரதரவென்று இழுத்தபடி மன் - ஹோலுக்குப் பக்கத்தில் போய் த்திவிட்டு - உள்ளே எட்டிப் பார்த்தான்.

துர்நாற்றம் மூக்கின் நாசித் துவாரங்களை ண்ட -

உள்ளே -

ஆழமாய் இருட்டுப் பள்ளம்.



வெங்கடேஷ் மாதவனை கொஞ்சம் கொஞ்சமாய் நகர்த்தி - அந்த மேன் ஹோலுக்குள் தள்ளினான்.

''தொபுக்...''

உள்ளே மாதவன் எதுலெதிலேயோ - பட்டு பட்டு - வழுக்கிக் கொண்ட போனான். அடுத்த சில விநாடிகளில் நிசப்தம்.

வெங்கடேஷ் அந்த மேன்ஹோலின் இரும்பு வட்டத்தை - மறுபடியும் - பொருத்தி கடப்பாறையால் தட்ட - அது சரியாய் உட்கார்ந்து கொண்டது.

வழிந்த வியர்வையை புறங்கையால் - துடைத்துக் கொண்டு - அரக்க பரக்க சுற்றும் முற்றும் பார்த்தபடி - சூப்பிரண்டின் குவார்ட்டர்ஸை நோக்கிப் போனான் வெங்கடேஷ்.



## 25

அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் - சிறைச்சாலை முழுவதும் பரபரத்துப் போயிற்று. ஜெயில் சூப்பிரண்ட் வீனிங் செக்ஷன் வார்டனிடம் எரிந்து விழுந்தார்.

''எல்லா பக்கமும் அந்த மாதவனை நல்லா தேடிப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன் ஸார்...''

''எத்தனை மணிக்கு அவன் வெளியே போனான்?''

''பத்தரை மணிக்கு...'

''டாய்லெட்டுக்கு போறதாதானே சொன்னான்?''

''ஆமா... ஸார்...''

''டாய்லெட்டுக்கு போறேன்னு சொல்லிட்டு போனவன் எங்கே போயிருக்க முடியும்...?''

''அதான் ஸார் தெரியலை...''

''ஜெயில்ல அவனோட தோஸ்த் யாரு...?''

''அவன் யார்கூடவும் நெருக்கமா பழகலை ஸார். தானுண்டு தன் வேலையுண்டுன்னு... இருந்தான்...''

சூப்பிரண்ட் நெற்றியைக் கீறிக்கொண்டார். ''அவன் தப்பிச்சு போயிருக்கவும் முடியாது. இந்த பகல் நேரத்தில் அது சாத்தியமே கிடையாது...''

வார்டன் கனகசாமி அறைக்குள் நுழைந்து சல்யூட் பதித்தார்.

''என்ன...?''

''எல்லா கைதிகளையும் க்ரௌண்ட்ல அஸெம்பிள் பண்ணியாச்சு ஸார்.''

''வாங்க போலாம்.''

சூப்பிரண்ட் எழுந்து க்ரௌண்டை நோக்கி நடந்தார். செம்மண் மைதானத்தில் வெய்யில் கொளுத்திக் கொண்டிருக்க - எல்லா கைதிகளும் வரிசையாய் நின்று நேர் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சூப்பிரண்ட் திட்டின் மேல் ஏறி நின்றார்.

குரலை உயர்த்திக் கொண்டு - முகம் சிவக்கக் கத்தினார். ''வீவிங் செக்ஷனிலிருந்து டாய்லெட்டுக்கு போன மாதவன் திரும்பி வரலை. கடந்த ரெண்டுமணி நேரமா இந்த ஜெயில் பூராவும் தேடிட்டோம். அவன் கிடைக்கலை. ஒருவேளை அவன் தப்பிச்சும் போயிருக்கலா. அப்படி அவன் தப்பிப் போயிருந்தா... அந்த விஷயம் உங்கள்ல யார்க்கும் தெரியாமே இருக்காது...! மாதவனை பத்தரை மணி சுமார்க்கு யார் யார் பார்த்தீங்க...? பார்த்தவங்க கையை உயர்த்துங்க...''

யாருமே கையை உயர்த்தவில்லை.



''பார்த்தவங்க தைரியமா கையைத் தூக்கலாம்...''

வெங்கடேஷ் கையை உயர்த்தினான்.

சூப்பிரண்ட் அவனை மலர்ச்சியாய் ஏறிட்டார்.

''வெங்கடேஷ் நீ பார்த்தியா...?''

''ஆமா... ஸார்.''

''நீ எங்கிருந்து அவனைப் பார்த்தே...?''

''உங்க குவாட்டர்ஸுக்கு பின்னாடியிருக்கிற தோட்டத்திலிருந்து நான் பார்த்தேன். மாதவன் டாய்லெட்டுக்கு போயிட்டிருந்தான்.''

''அவன்கூட வேற யாராவது இருந்தாங்களா...?''

''யாருமில்ல ஸார்...''

''டாய்லெட்டுக்குள்ளே அவன் போறதைப் பார்த்தியா?''

''ஆமா...''

''வெளியே வந்ததை?''

''பார்க்கலை... ஆனா...''

''என்ன ஆனா...?''

''நூல்பேல்களை ஏத்திகிட்டு லாரி ஒண்ணு உள்ளே வந்தப்ப... அது மேல யாரோ தாவி ஏறினமாதிரி இருந்தது ஸார். அது லாரியோட கிளீனராகவும் கூட இருக்கலாம்.''

சூப்பிரண்ட் பக்கத்தில் நின்றிருந்த வார்டனை திரும்பிப் பார்த்தார். ''பேல் லாரி இன்னிக்கு உள்ளே வந்ததா?''

''ஆமா... ஸார்...''

''இந்த விஷயத்தை ஏன்யா என்கிட்டே சொல்லலை...''

''உங்களுக்கு தெரிஞ்சிருக்கும்ன்னு நினைச்சோம் ஸார்.''

''எனக்கு எப்படிய்யா தெரியும்...? நான்தான் தாம்பரம் சப்-ஜெயில் வரைக்கும் போய்ட்டு அரைமணி நேரத்துக்கு முன்னாடிதானே வந்தேன்...''

வார்டன்கள் மௌனமாய் நிற்க -

சூப்பிரண்ட் எரிந்து விழுந்தபடி கேட்டார். ''அது எந்த கம்பெனி லாரி...?''

''திருமுருகன் லாரி ட்ரான்ஸ்போர்ட்''

''எம்.எஸ்.டி.3636 தானே?''

''ஆமா... ஸார்...''

''லாரியோட டெஸிக்னேட் ப்ளேஸ் எது...?''

''ராணிப்பேட்டை மில் ஸார்...''

''உடனே வயர்லெஸ் மூலமா தகவல் அனுப்பி லாரியை மடக்க ஏற்பாடு பண்ணுங்க... வெங்கடேஷ் சொல்றதைப் பார்த்தா... அவன் லாரி மூலமாத்தான் தப்பிச்சிருக்கணும்ன்னு தோணுது...''

## 26



மறுநாள் காலை. பதினோரு மணி. சூப்பிரண்ட் மகள் சுதா கார்டனில் சில பூச்செடிகளை நடுவதற்காக - வெங்கடேஷை குழி தோண்ட சொல்லிக் கொண்டிருந்தபோது - சூப்பிரண்ட் பைக்கில் வந்து இறங்கினார்.

சுதா அவரை நெருங்கினாள்.

''எங்கேப்பா போயிட்டு வர்றீங்க...?''

''கமிஷனர் ஆபீஸுக்கு...''

''அந்த மாதவனைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சதா...?''

''ஊ... ஹூ...ம்...''



''ஆச்சர்யமாயிருக்குப்பா! எப்படி தப்பிச்சு போயிருப்பான்?''

''பாவிப்பய...! பூனை மாதிரி இருந்துகிட்டே சமயம் பார்த்து கம்பி நீட்டிட்டான்... அவனால எல்லார்க்கும் மெமோ... வீவிங் செக்ஷன் வார்டனுக்கு சஸ்பென்ஷன் ஆர்டர். நல்ல வேளையா நான் ஜெயில் காம்பஸுக்குள்ளே இல்லை. ஆன் ட்யூட்டியில் தாம்பரம் போயிருந்ததாலே சஸ்பென்ஷன் ஆர்டரிலிருந்து நான் தப்பிச்சுட்டேன்...''

''ஆமா... அது என்னப்பா? இடது கையில் இன்னொரு கவர்...?''

''மை குட்னஸ்! இதைச் சொல்லத்தான் வந்தேன்...! வெங்கடேஷ் எங்கே...?''

வெங்கடேஷ் மறுபக்கமிருந்து ஓடி வந்தான்.

''என்ன ஸார்!''

''ஸாரி.. வெங்கடேஷ்! உனக்கு ஒரு வருத்தமான செய்தி...''

''அந்த செய்தி என்னான்னு எனக்கு தெரியும் ஸார். ஜனாதிபதி என்னோட கருணை மனுவை நிராகரிச்சுட்டார்.... சரிதானே...?''

''வெங்கடேஷ்!''

''நான் இதை எதிர்பார்த்ததுதான் ஸார்... யாரும் எனக்காக வருத்தப்பட வேண்டியதே இல்லை...''

''வர்ற மூணாம்தேதி உன்னை தூக்குல போடச் சொல்லி பிளாக் வாரண்ட்டும் வந்தாச்சு...''

''சந்தோஷம்...''

''உனக்கு இது அதிர்ச்சியாய் இல்லையா?''

''என்னோட கோபிகா என்னைவிட்டு போனது தான் எனக்கு அதிர்ச்சி. நான் தூக்குல

தொங்கப் போறது எனக்கு சந்தோஷமான விஷயம்.''

''உன்னோட கருணை மனுவை ஜனாதிபதி ஏத்துக்குவார்ன்னு நினைச்சேன்... இப்படியொரு முடிவை நான் எதிர்பார்க்கலை...''

''ஸார்! இன்னொரு விஷயத்தை கவனிச்சீங்களா?''

''என்ன...?''

''என்னை என்னிக்கு தூக்குல போடப் போறீங்க...?''

''வர்ற மூணாம் தேதி...''

''ஆறு மாசத்துக்கு முன்னாடி என் கோபிகா இறந்து போனதும் மூணாம் தேதிதான். அவ ஒரு சாயந்தர நேரத்துல செத்துப் போனா! நான் விடியறகாலையில சாகப் போறேன். அவ்வளவு தான்...''

''வெங்கடேஷ் உம்மனசுல ஏதாவது ஆசையிருந்தா சொல்லு... நான் அதை நிறைவேத்தறேன்...''

''செய்வீங்களா ஸார்...?''

''கண்டிப்பா... செய்யறேன்...''

''என்னை தூக்குல போட்டதும் - என்னோட பாடியைக் கேட்டுக்கிட்டு யாரும் வரமாட்டாங்க... அப்படி வந்தாலும் நீங்க தராதீங்க. என்னோட கோபிகாவை ஐ.ஜி.ஆபீஸுக்கு பின்னாடி இருக்கிற மயானத்துலதான அடக்கம் பண்ணியிருக்காங்க. அந்த இடம் எதுன்னு கண்டுபிடிச்சு - அதுக்குப் பக்கத்திலேயே என்னையும் புதைக்கணும்... செய்வீங்களா ஸார்...?''

''செய்யறேன்...''

''அப்புறம்... ஸார்...''

''சொல்லு...''

''எனக்கு கோபிகாவோட போட்டோ ஒண்ணு வேணும்...''



''எதுக்கு...?''

''தூக்குல போடறதுக்கு முதல்நாள் ராத்திரி பூராவும் அந்தப் போட்டோவையே பார்த்துட்டிருக்கத்தான்...''

''போட்டோ யார்கிட்டே இருக்கும்...?''

''என்னோட ஃப்ரெண்ட் பிரதீப்பை காண்டாக்ட் பண்ணிங்கன்னா... அவன் கொண்டு வந்து தருவான்...''

''உன்னோட சொந்தத்துல இருக்கிறவங்களை சந்திச்சு பேச ஆசைப்படறியா?''

''நான் ஆசைப்படலை...''

''அப்பா... அம்மாவை...?''

''அவங்களைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு கொலைகாரன். இந்த கொலைகாரனைப் பார்க்க... அவங்களும் வரமாட்டாங்க... நானும் பிரியப்படலை...! கோபிகாவும் நானும் கல்யாணம் பண்ணிகிட்டு - சந்தோஷமா இருக்கணுமங்கிறதுக்காக - கோயமுத்தூர்ல இருக்கிற ஒரு பேங்கல ஐம்பதாயிரம் வரைக்கும் பணம் போட்டு வெச்சிருக்கேன். அந்தப் பணத்தை என்னோட தங்கச்சி கல்யாணத்துக்கு உபயோகப்படற மாதிரி - ஏதாவது ஒரு ஏற்பாடு - பண்ணணும்...''

சூப்பிரண்ட் ஆச்சர்யப்பட்டார்.

''உனக்குத்தான் சிஸ்டர்ஸ் யாருமில்லைன்னு சொன்னியே வெங்கடேஷ்?''

''கூட பொறந்தாதான் சிஸ்டரா ஸார்?''

''நீ என்ன சொல்றே...?''

''உங்க டாட்டர் சுஜாவை எனக்கு சிஸ்டர்ன்னு சொல்றேன், ஏதாவது ஆட்சேபணையிருக்கா ஸார்...?''

''வெ... வெங்கடேஷ்...!''

''ஸார்! அந்த இருபத்தஞ்சாயிரம் ரூபாய் பணத்தை வெச்சுத்தான் உங்க டாட்டர்

கல்யாணத்தை பண்ணணுங்கிற நிலைமையில் நீங்க இல்லை. இருந்தாலும் அந்தப் பணம், சுதாவுக்கு என்னோட சீதனமா இருக்கட்டும்...''

சூப்பிரண்ட்டும் சுதாவும் கண்கள் பனிக்க - வெங்கடேஷை பார்க்க - அவன் விரக்தியாய் சிரித்துக் கொண்டே இருவரையும் பார்த்து கும்பிட்டான்.

## 27



இரண்டாம் தேதி காலை பத்து மணி.

பிரதீப் - சூப்பிரண்டின் அறைக்குள் நுழைந்தான். ''குட்மார்னிங் ஸார்''

''வா... பிரதீப்...''

சூப்பிரண்ட் நாற்காலியைக் காட்டினார். அவன் உட்கார்ந்ததும் கேட்டார்.

''கோபிகாவோட போட்டோ கிடைச்சுதா?''

''கிடைச்சுது ஸார்...'' - சொல்லிக் கொண்டே கார்ட் சைஸில் இருந்த ஒரு கவரை நீட்டினான் பிரதீப்.

அவர் பிரித்துப் பார்க்க -

கோபிகா பளீரென்ற பல்வரிசையைக் காட்டி முறுவலித்தாள். கண்களில் பேசுகிற பாவம்.

''வெங்கடேஷுக்கு இந்த ஃபோட்டோ சந்தோஷத்தைக் கொடுக்கும். அவனை இப்போ நீ பார்க்கப் போறே இல்லையா...?''

''ஆமா... ஸார்''

''நீயே இந்த ஃபோட்டோவைக் குடுத்துடு.''

''சரி ஸார்...''

''வெங்கடேஷ் உன்கிட்டே தனியா ஏதோ பேசணும்ன்னு ஆசைப்பட்டான். ரூம் ஏற்பாடு



பண்ணியிருக்கேன். அவன் என்ன ஆசைப் பட்டாலும் அதை நிறைவேத்தி வைக்க வேண்டிய பொறுப்பு உன்னோடது.''

''நான் காத்திட்டிருக்கேன் ஸார்.''

''வா....'' - சூப்பிரண்ட் பிரதீப்பை கூட்டிக் கொண்டு போய் - சிமெண்ட் பூச்சு இல்லாத ஒரு செங்கல் அறையில் உட்கார வைத்துவிட்டு - வார்டனிடம் சொன்னார்.

''கனகசாமி! போய் வெங்கடேஷைக் கூட்டிகிட்டு வா...''

வார்டன் வேகமாய் போய் - வெங்கடேஷைக் கூட்டிக்கொண்டு வந்தார். பிரதீப் அவனைப் பார்த்ததுமே - பாய்ந்து வந்து கண்களில் நீர் ததும்ப கட்டிக் கொண்டான்.

''வெ...வெங்கடேஷ்...!''

''போட்டோ கொண்டு வந்தியா பிரதீப்...?''

''இதோ...''

பிரதீப் நீட்டிய போட்டோவை வாங்கி - அதில் சிரித்த கோபிகாவையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு - சூப்பிரண்டிடமும், வார்டனிடமும் திரும்பினான் வெங்கடேஷ்.

''ஸார்! நான் பிரதீப்கிட்டே தனியா ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும்.''

பூட்ஸ் சத்தங்களோடு - அவர்கள் இருவரும் நகர்ந்தார்கள்.

வெங்கடேஷ் பிரதீப்பை - புன்னகையோடு ஏறிட்டான்.

''பிரதீப்! இந்த போட்டோ உனக்கு எப்படி கிடைச்சுது?''

''கோபிகாவோட வீட்டு விசேஷங்களுக்கு வழக்கமா போகிற - போட்டோகிராபரை பிடிச்சேன். விஷயத்தைச் சொல்லி போட்டோவை வாங்கிக்கிட்டு வந்தேன்.''

''சரி! உன்னோட வெர்மிஸெல்லி பாக்டரி லாபத்துல ஓடுதா? நஷ்டத்துல ஓடுதா...?''

''வெ... வெங்கடேஷ்!''

''நாளைக்கு தூக்குல தொங்கப் போறவன்... என்னடா திடீர்ன்னு பிசினஸைப் பத்தி கேக்கறானேன்னு பார்த்தியா...? சும்மா தெரிஞ்சுக்கத்தான்... கேட்டேன்.''

''லாபத்துலதான் ஓடுது....''

''இப்போ லாபத்துல ஓடுதுன்னு சொல்லு...''

''வெங்கடேஷ் நீ என்ன சொல்றே...?''

''ஆறு மாசத்துக்கு முந்தி உன்னோட பேக்டரி நஷ்டத்துல ஓடிட்டிருந்ததா உன் கூட்டாளி ஒருத்தன்... சொன்னான்.''

''கூ... கூட்டாளியா...?''

''ஆமா... அவன் பேரு மாதவன்.... படிச்சுட்டு வேலை கிடைக்காததினால திருடனா மாறினவன்...''

பிரதீப் குபீரென்று முகம் வெளுத்தான்.

''மா... மாதவனா...? அப்படி யாரையும் எனக்குத்... தெரி... தெரியாதே!''

''பொய் பேசி பிரயோஜனமில்லை பிரதீப்! இதே ஜெயிலில் இருந்த மாதவன் என்கிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டான்.''

பிரதீப் நடுக்கமாய் பின்னுக்கு நகர்ந்து சுவர்க்கு 'தட்'டென்று முட்டிக் கொண்டு நின்றான்.

''வெ...வெங்கடேஷ்!''

''மாதவன் என்கிட்ட என்னென்ன சொன்னான்னு நீ தெரிஞ்சுக்க வேண்டாமா பிரதீப்...?''

''.....''

வெங்கடேஷ் கேட்டான் -



''கோபிகாவை நீயும் காதலிக்க முயற்சி பண்ணி தோத்துட்டியாமே?''

''...''

''என்னை அவ விரும்பினதாலே உனக்கு என்மேல் ஆத்திரமாமே...?''

''...''

''அந்த ஆத்திரத்தையெல்ம் மனசுக் குள்ளேயே வெச்சுகிட்டு - சமயம் பார்த்து பழிவாங்க காத்திட்டிருந்தியாமே...?''

''...''

''நானும் கோபிகாவும் திருநீர்மலைக்கு போய் கல்யாணம் பண்ணிக்க இருந்த திட்டத்தை - உன்னோட கூட்டாளி மாதவன்கிட்டே சொல்லி - நகைகளை கொள்ளையடிச்சுட்டு அவளையும் - தீர்த்துடுன்னு சொன்னியாமே...?''

''வெ...வெங்கடேஷ்...''

''கொள்ளையடிச்ச கோபிகாவோட அறுபது பவுன் நகைகளில் உனக்கு பாதி! அவனுக்கு பாதியாமே....''

பிரதீப் தடாலென்று - கீழே விழுந்து - வெங்கடேஷின் கால்களைப் பற்றிக் கொண்டான். ''எ...என்னை மன்னிச்சுடு... வெங்கடேஷ்... எ... என்னைக் கா... காட்டிக் குடுத்துடாதே...''

''முட்டாள்! உன்னைக் காட்டித் தர்றதாயிருந்தா.. அந்தக் காரியத்தை பத்து நாளைக்கு முன்னாடியே பண்ணியிருப்பேன். நான் இப்போ உன்னைக் கூப்பிட்டது உன்னோட சாமார்த்தியத்தை பாராட்டத்தான்... எனக்கு உதவி பண்றமாதிரி பாவ்லா பண்ணிகிட்டே - எனக்கு பின்னாடி எவ்வளவு ஆழமான குழியை தோண்டியிருக்கே...: என்னோட தூக்குத் தண்டனையை - குறைக்கிறதுக்காக -

ஹைகோர்ட்ல அப்பீல் பண்ணணும்னு எந்தெந்த வக்கீலையோ போய் பார்த்தே. ஜனாதிபதி கருணை மனு போட்டே... ஜெயில்ல இருந்த என்னை பார்க்க வர்றப்பெல்லாம் அழுதே...! இந்த நடிப்பு எல்லார்க்கும் வந்துடுமா... என்ன...?''

எழுந்து நின்ற - பிரதீப் கையெடுத்து கும்பிட்டான்.

''வெ... வெங்கடேஷ்! நா... நான் தெரியாத்தனமா பண்ணிட்டேன். கொலைப்பழி உம்மேலே வந்து விடியும்னு நான் கொ... கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை...''

''அந்த பாவத்துக்கு பிராயச் சித்தம் தேடத்தான்... ஜெயிலுக்கு வரும்போதெல்லாம் என்னைப் பார்த்து அழுதியா...?''

பிரதீப் கண்களில் வழியும் நீரோடு பதில் பேசாமல் நிற்க - வெங்கடேஷ் அவன் தோளைத் தட்டினான்.

''இனிமே என்னை நீ மறந்துடலாம்... பிரதீப்...! நாளைக்கு என்னைத் தூக்குல போட்டதும் இந்த கேஸோட எல்லா ஜன்னல் களையும் உடனே மூடிடுவாங்க. கோபிகாவோட கொலைக் கேஸ் ஃபைல் பரணுக்கு போயிடும். மாதவன் இந்த விஷயத்தை வெளியே சொல்லிடுவானோன்னு பயந்துக்க வேண்டாம். அவன் இந்த விஷயத்தை வெளியே சொல்லாதபடி ஏற்பாடு பண்ணிட்டேன்.''

''வெ... வெங்கடேஷ்...''

''போ! உன்னை நம்பி மூணு சிஸ்டர்ஸ் இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் கல்யாணம் பண்ணி வெக்க வேண்டிய கட்டாயம் உனக்கு இருக்கு. பிசினஸை நல்லா கவனி. அப்பா அம்மாவை நல்லபடி பார்த்துக்க. நீயும் ஒரு கல்யாணத்தை பண்ணிட்டு சந்தோஷமா இரு... நான் கேட்டபடி என்னோட கோபிகா



போட்டோவைக் கொண்டு வந்து கொடுத்ததுக்கு ரொம்ப சந்தோஷம். குட் பை...''

''வெ...வெங்கடேஷ்...''

''குட்.... பை....''

பிரதீப்பின் கையை வலியப் பற்றி குலுக்கிவிட்டு - மெல்ல திரும்பி நடந்தான் வெங்கடேஷ்.

அறைக்கு வெளியே வந்தபோது -

சூப்பிரண்ட் எதிர்ப்பட்டார்.

''என்ன வெங்கடேஷ்... பேசிட்டியா...?''

''பேசிட்டேன் ஸார்...! பிரதீப் மாதிரி ஒரு உண்மையான நண்பன் அடுத்த ஜென்மத்திலும் எனக்கு கிடைக்கணும்னு ஆண்டவனை வேண்டிக்கப் போறேன். எனக்காக கண்ணீர் சிந்தற ஒரே ஆத்மா அவன்தான் ஸார். இப்பக்கூட பாருங்க எப்படி அழறான்னு...! அவனை என்னால சமாதானப்படுத்தவே முடியலை... நீங்களாவது அவனை சமாதானப்படுத்தி - அனுப்பி வையுங்க ஸார்... நான் போறேன்...''

''வெங்கடேஷ்...''

''என்ன ஸார்...?''

''மரணத்தை நினைச்சா உனக்கு பயமே வரலையா...?''

''வாழணும்ங்கிற ஆசை இருக்கிறவனுக்குத் தான் மரணத்தை நினைச்சா பயம் வரும். நான் கோபிகாவைப் பார்க்கப் போகிற சந்தோஷத்தில் இருக்கேன்.''



## 28

மறுநாள் சூரியன் இன்னமும் கண்விழிக்காத அந்த மூன்றாம் தேதியின் வைகறை வேளையில்

- கடப்பைக்கல் வராந்தாவில் - பூட்ஸ் சத்தங்கள் சூழ நடந்து வந்து - ஹேங்கிங் பிளாட்பாரத்தில் ஏற்றபட்டு - டாக்டர் பரிசோதனை செய்து ஓ.கே. சொல்ல - நீளமாய் அங்கி அணிந்த ஒரு நபர் 'பிரேயர்' ஸ்தோத்திரத்தை உச்சரிக்க - லீவரை இயக்கக்கூடிய ஆள் - வெங்கடேஷின் அருகே வந்து - இரண்டு கைகளையும் பின்னுக்கு மடக்கி கட்டி - முகத்திற்கு கறுப்புத் துணி போட முயன்ற விநாடி - வெங்கடேஷ் வாயசைத்தான்.

''என்னோட பாக்கெட்டில் இருக்கிற போட்டோவை எடுத்து - ஒரு பத்து செக்கண்ட்ஸ் காட்ட முடியுமா...?''

அந்த ஆள் வெங்கடேஷின் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து - கோபிகாவின் போட்டோவை எடுத்து - முகத்திற்கு நேரே பிடித்தான்.

போட்டோவில் சிரித்த கோபிகாவையே -

இமைக்காமல் - பார்த்துவிட்டு - கண்களை இறுக மூடிக்கொண்டான் வெங்கடேஷ். ''இனிமே உங்க சடங்குகளை பண்ணலாம்...''

முகத்திற்கு கறுப்புத்துணி போர்த்தப்பட்டது.

'கோபிகா! நான் வர்றேன்...'

சூப்பிரண்ட் தன் மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்துவிட்டு கையை அசைத்தார்.

லீவர் அசைக்கப்பட -

வெங்கடேஷின் கால்களுக்கு கீழே இருந்த -

பலகை - சட்டென்று விலகி - ஒரு சதுரத்தைக் காட்ட -

அவனுடைய உடல் துடித்துக் கொண்டது.

சூப்பிரண்ட் கண்ணீரோடு முகத்தை திருப்பிக் கொண்டு - விடிய ஆரம்பித்திருந்த கிழக்கு வானத்தைப் பார்த்தார்.

*(முற்றும்)*



## நிஜம்!

பயிர் தண்ணீரில் விளையும்
கண்ணீரில் வளைந்துவிடாது!

பட்டம் காற்றினில் உயரும்
புயலினில் அறுந்துவிடும்!

பணம் உழைப்பில் உயரும்
செருக்கில் அழிந்துவிடும்!

'காதல்' ஆசையில் வளரும்
'வேசத்தால்' அழிந்துவிடும்!

சாது ரவி
ஆரணி-14

## என்னவளே

காலைக் கதிரவன்
கண் இமைக்க
யோசிக்கிறான்...
நீ
இன்னும்
கோலமிட வரவில்லையே
என்று...!

க.ரா.மனோஜ்,
எல்.கணவாய்பட்டி.